வியாழன் தோறும் CANADA EELAMURASU

ஈழமுரசு

முரசு: 21 ஜனவரி 24 - 30, 2019 இதழ்: 156



கேப்பாப்பிலவு:

நிலத்துக்காக 700 நாட்களாக போராடும் மக்கள்



கறுப்பு அறிக்கையாக மாறுவதற்கு முன்னோடியாக வெள்ளை அறிக்கையாக மாறும் உத்தேச நகல் அரசியல் யாப்பு

மே18 தமிழின அழிப்பு நாள் நிகழ்வு

பொதுக்கூட்டமும் ஊடக சந்திப்பும்

11ம் பக்கம் பார்க்க

ஈழமுரசு

போர்க்குற்றவாளிகளை பாதுகாக்கும் உபாயங்கள்

லண்டனில் சிறிலங்கா தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவுக்கு எதிராக வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள பிடியாணை, வியன்னா உடன்பாட்டை மீறும் செயல் என, பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகத்திடம் சிறிலங்கா தெரிவித்துள்ளது. வெஸ்ட்மினிஸ்ட்டர் நீதிமன்றத்தின் இந்த அதிரடி உத்தரவு சிறிலங்கா அரசாங்கத்துக்கு கடும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் நிலையிலேயே இந்தக் கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரோஜா சிறிசேன தல்பஹேவ, இது தொடர்பாக தகவல் வெளியிடுகையில், ”பிரிகேடியர் பெர்னான்டோ அப்போது இராஜதந்திர கடவுச்சீட்டை வைத்திருந்தார். எனவே அவருக்கு இராஜந்திர விலக்குரிமையும்,சிறப்புரிகளும் இருந்தன. பிரிகேடியர் பிரியங்க வழக்கு ஒருதலைப்பட்சமாக விசாரிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை வியன்னா உடன்பாட்டை மீறும் செயல் என, பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியகத்திடம் தெரிவித்துள்ளோம்” எனவும் தெரிவித்திக்கின்றார்.

இந்த வழக்கு கடந்த 21ஆம் நாள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர், சிறிலங்கா அரசாங்கம், பிரித்தானிய வெளிவிவகார பணியகத்திடம் எதிர்ப்பை வெளியிட்டது. இதுதொடர்பாக, அளிக்கப்பட்ட சமர்ப்பணத்தில்,பிரிகேடியர் பிரியங்க, பிரித்தானியாவை வதிவிடமாக கொண்டவரில்லை. இராஜதந்திர தலைவராக பிரித்தானியாவுக்கு கடமைப் பயணம் மேற்கொண்டிருந்தார்.எனவே அவருக்கு விலக்குரிமையும், முன்னுரிமைகளும் இருந்தன என்பதுதான் சிறிலங்கா அரசாங்கத்தின் கருத்தாக வெளிவந்திருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனீவாவில் அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள நிலையில், பிரியங்க பெர்னான்டோவுக்கு வெளிநாடு ஒன்றில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருப்பது சிறிலங்காவுக்குப் பெரும் பின்னடைவாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. லண்டனில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழர்களை அச்சுறுத்தியதுதான் அவர் மீதான குற்றச்சாட்டு. ஆனால், இறுதிப்போரில் அவர் எந்தளவுக்குச் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதை மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகள் ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தார்கள்.

இறுதிப்போரில் சம்பந்தப்பட்ட, மனிதாபிமானத்துக்கு முரணான செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்ட உயர் இராணுவ அதிகாரிகளுக்கு உயர் இராஜதந்திரப் பதவிகளைக் கொடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பது சிறிலங்கா அரசாங்கத்தின் வழமையாகவே இருக்கின்றது. போர்க்குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்கான ஒரு உபாயமாகவே சிங்கள அரசாங்கம் இதனைச் செய்கின்றது என்பது வெளிப்படை. இராஜதந்திரிகளுக்கு வியன்னா உடன்படிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பைத் துஷ்பிரயோகம் செய்யும் ஒரு செயற்பாடுதான் இது.


இறுதிப்போரில் அதிகளவு மனிதப் படுகொலைகளுக்கும், ஆட்கள் காணாமலாக்கப்பட்டமைக்கும் காரணமாக இருந்த 58 ஆவது படைப்பிரிவின் தளபதியாகக் கடமையாற்றிய சவேந்திர சில்வாவைப் பாதுகாப்பதற்காக சிறிலங்கா மேற்கொள்ளும் முயற்சிகளைக் கடந்த வாரங்களில் பார்த்தோம். முதலில் இராஜதந்திர அந்தஸ்த்துடன் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருந்த அவர், அங்கு நெருக்கடிகளை எதிர்கொண்ட நிலையிலேயே திருப்பி அழைக்கப்பட்டிருந்தார்.ஆண்மையில் இராணுவத்தின் பிரதம அதிகாரியாக அவர் நியமிக்கப்பட்ட போது சர்வதேச கண்டனங்கள் உருவாகியிருந்தமையையும் காண முடிந்தது.

சிறிலங்கா அரசியலில் பிரதான கட்சிகளிடையே - தலைவர்களிடையே என்னதான் முரண்பாடுகள் இருந்தாலும், ஒரு விடயத்தில் மட்டும் அவர்கள் ஒருமித்த கருத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அது, போர்க் குற்றங்களில் ஈடுபட்ட படையினரைப் பாதுகாப்பதில். மைத்திரி மட்டுமன்றி, மகிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய தலைவர்கள் அனைவருமே இதனை வெளிப்படையாகவே சொல்லிவருகின்றார்கள். இராணுவ அதிகாரிகளைக் காட்டிக்கொடுக்கப்போவதில்லை எனவும், சர்வதேச விசாரணைகளுக்கு அனுமதிக்கப்போவதில்லை எனவும் தொடர்ச்சியாகச் சொல்லிவருவதைச் செயலிலும் காட்டுகின்றார்கள்.

அதன் ஒரு பகுதியாகத்தான் போர்க் குற்றவாளிகளுக்கு இராஜதந்திர அந்தஸ்த்து கொடுக்கப்படுகின்றது. மகிந்த ஆரம்பித்துவைத்த இந்தச் செயற்பாட்டை இப்போது மைத்திரியும் முன்னெடுத்துவருகின்றார். லண்டனில் சிறிலங்கா தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவும் இவ்வாறு நியமனம் பெற்ற ஒருவர்தான். இராஜதந்திரிகளுக்கு விஷேட அந்தஸ்த்தையும், விதிவிலக்குகளையும் கொடுக்கும் வியன்னா உடன்படிக்கை இவர்களைப் பாதுகாக்கும் என்பது சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடு.


இனவாதத்தில் ஊறிவளர்ந்த பிரியங்க பெர்னான்டோ போன்றவர்கள் லண்டன் சென்ற பின்னரும் அதேபோன்று தமிழர்களை அச்சுறுத்திய பின்னணியிலேயே பிரித்தானிய சட்டம் அவர்மீது இப்போது பாய்ந்துள்ளது. போர்க் குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்கு இராஜதந்திர அந்தஸ்த்தைப் பயன்படுத்திக்கொள்ளும் சிறிலங்கா அரசாங்கத்தின் உபாயத்தை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் அனுமதிக்கக்கூடாது. இவ்விடயத்தில் கடுமையாக நடந்துகொள்ள வேண்டிய அவசியம் இருப்பதைத்தான் பிரியங்க பெர்னான்டோவின் விவகாரம் சர்வதேசத்துக்கு உணர்த்தியிருக்கின்றது.

தேசியத் தலைவரின் சிந்தனையிலிருந்து




எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால், மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் தலை நிமிர்ந்து நிற்கமுடிகின்றது.

மாவீரர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு மாவீரர்களின் நினைவை ஈழமுரசில் பதிவு செய்ய எமக்கு அனுப்பி வைக்கவும்



எங்களுக்காய் தங்கள் வாழ்வை தியாகம் செய்த எம் தெய்வங்களை தினமும் நினைவு கூருவோமாக.

ஈழமுரசு
CANADA EELAMURASU



எம்முடனான தொடர்புகளுக்கு:
647-808-7766
647-408-8049

email: eelamurasu@yahoo.com

https://www.facebook.com/Eelamurasu-1400177629995000/



கேப்பாப்பிலவு:

நிலத்துக்காக 700 நாட்களாக போராடும் மக்கள்

"நாங்கள் எங்கள் நிலத்திலுள்ள சொந்த வீடு தோட்டத்தில் சமைப்பதற்கும் உண்பதற்கும் உறங்குவதற்கும் விரும்புகின்றோம்."

இராணுவ முகாமொன்றிற்கு வெளியே 700 நாட்கள் பகலும் இரவும் போராட்டம் என்பது மிக நீண்ட காலம். எனினும், இலங்கையின் வடக்கில் முல்லைத்தீவில் உள்ள கேப்பாபிலவு மக்கள் 2017 மார்ச் முதலாம் திகதி முதல் அதனையே செய்து வருகின்றனர். அவர்கள் இராணுவத்திடமிருந்தும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்தும் வரும் அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் எதிர்கொள்வதற்கு துணிச்சலுடன் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும், அவர்கள் வெயில், மழை, பனி, புழுதி போன்றவற்றையும் எதிர்த்துப் போராடவேண்டியிருந்தது. அவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தைத் தொடர்வதற்கும், பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கும் முதியவர்களைப் பராமரிப்பதற்கும் பெரும் நெருக்கடியை சவாலை சந்திக்கவேண்டியிருந்தது.

இலங்கையில் நிலத்திற்காக மக்கள் மேற்கொண்ட இரவும் பகலும் தொடர்ந்த மிக நீண்ட இடைவிடாத போராட்டம் இதுவெனலாம். அவர்கள் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் போராடியுள்ளனர். இது தவிரவும் அரசியல்வாதிகள், உள்ளூர் தமிழ் அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், ஊடகங்கள், மதப்பிரதிநிதிகள், சர்வதேச சமூக பிரதிநிதிகள் உட்பட பலருடன் சந்திப்பையும் மேற்கொண்டுள்ளனர்.

அவர்களது உறுதியான போராட்டம் மேலும் பல போராட்டங்களிற்கான உத்வேகத்தை வழங்கியது. டிசம்பர் 2017 இல் இராணுவம் கேப்பாபிலவில் சில நிலங்களை விடுவித்தவேளை அவர்கள் சில வெற்றிகளையும் அனுபவித்தனர். எனினும் தங்கள் நிலங்கள் முழுவதையும் விடுவிக்ககோரும் அவர்களது போராட்டம் தொடர்ந்தது.

கடந்த வருடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கு கிழக்கில் படையினர் வசமுள்ள நிலங்களை 2018 டிசம்பர் 31ஆம் திகதிக்குள் பொதுமக்களிடம் ஒப்படைப்பதாக வாக்குறுதியளித்தார். இந்த வாக்குறுதி மீறப்பட்டவேளை கேப்பாபிலவு மக்கள் இராணுவ முகாம் வாசலிற்குச் சென்று தங்களுடைய நிலங்களைக் கோரினார்கள். இராணுவத்தினர் அவர்களுடன் பேச மறுத்தனர். இதன் பின்னர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னர் உதவி அரசாங்க அதிபர் 2019 ஜனவரி 25ஆம் திகதிக்குள் நிலங்கள் விடுவிக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

இதன் பின்னர் புதிதாக நியமிக்கப்பட்ட வட மாகாண ஆளுநரின் பணியாளர் ஒருவர் கேப்பாபிலவு மக்களைச் சந்தித்துள்ளார். அதன் பின்னர் ஜனவரி 20ஆம் திகதி ஆளுநரும் அவர்களைச் சந்தித்துள்ளார். இருவரும் மேலதிக கால அவகாசத்தை கோரியுள்ளனர். எனினும், கடந்த காலங்களில் இதுபோன்ற நேரத்தை வீணடிக்கும் தந்திரோபாயங்களை சந்தித்த அனுபவமுள்ள கேப்பாபிலவு மக்கள் ஜனவரி 25ஆம் திகதியே இறுதி நாள், அன்று அனைத்து நிலத்தையும் ஒப்படைக்கவேண்டும் என தெரிவித்துள்ளனர்.

ஒரு பெண்மணி ஆளுநரிடம், நிலங்கள் விடுவிக்கப்படுவதை உறுதி செய்யப்போகின்றாரா அல்லது இராணுவத்தினரின் துப்பாக்கி தனக்கு எதிராகவும் ஏனையவர்களிற்கு எதிராகவும் திரும்புவதை பார்க்கப்போகின்றாரா என கேள்வி எழுப்பியுள்ளார்.

25ஆம் திகதி நிலங்களை எங்களிடம் ஒப்படைக்காவிட்டால் நாங்கள் அவற்றை மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என கேப்பாபிலவு மக்கள் என்னிடம் தெரிவித்தனர். கடந்த சில நாட்களாக இராணுவம், ஆளுநர், வட மாகாண அதிகாரிகள் உட்பட பல தரப்பினருடனும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் அவர்கள் இதனையே தெரிவித்துள்ளனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட இந்த நிலம் புதுக்குடியிருப்பிற்கும் வற்றாப்பளைக்கும் இடையில் உள்ள முக்கிய வீதியில் நந்திக்கடலின் பக்கமாக அமைந்துள்ளது. கேப்பாபிலவு மிகவும் வளமான விளைச்சல் நிலங்களை கொண்டிருப்பதுடன், ஏரி பெருமளவு கடல்வளங்களைக் கொண்டுள்ளது. நாங்கள் வீட்டில் காலையாட்டிக்கொண்டு அமர்ந்திருந்தாலும் எங்களிற்கு உண்பதற்கான போதிய உணவு கிடைக்கும் என ஒருவர் என்னிடம் தெரிவித்தார். வீடுகளிற்கு அப்பால் பாடசாலைகள், கிராம அபிவிருத்தி சங்க கட்டடம், தேவாலயம், மயானம் உட்பட உணர்வுடன் பின்னிப்பிணைந்த இடங்களும் படையினரின் பிடியிலுள்ளன.விவசாயம் மீன்பிடி மற்றும் செழிப்புமிக்க கலாச்சார மத நடவடிக்கைகளுடன் பின்னிப்பிணைந்த கிராம வாழ்க்கை முதலில் யுத்தத்தினாலும் பின்னர் இராணுவத்தினாலும் அழிக்கப்பட்டுள்ளது.

துணிச்சலுடன் கருத்துக்களை தெரிவிக்கக்கூடிய சமூகத்தலைவியான இந்திராணி, தனது வீடு, தோட்டம் அமைந்திருந்த பகுதியிலேயே தற்போது படையினரின் தலைமையகமே உள்ளது என தெரிவித்தார். அவரது வீட்டின் வேப்பமரம் தறிக்கப்பட்டுள்ளதை அவர் பார்த்துள்ளார். தான் எப்படி துணிச்சலுடன் முகாம் நோக்கி சென்று ஏன் மரத்தை வெட்டினார்கள் என இராணுவத்தினரிடம் கேள்வி எழுப்பியதை அவர் நினைவுகூர்ந்தார். சிரேஸ்ட அதிகாரியொருவர் அதற்காக அவரிடம் மன்னிப்பு கோரியுள்ளார். அதன் பின்னர் தான் கேட்டுக்கொண்டதிற்கு இணங்க வெட்டப்பட்ட மரத்தின் பாகங்களை அவர் தனது உறவினரின் வீட்டிற்கு அனுப்பிவைத்தார் எனத் தெரிவித்த இந்திராணி வெட்டப்பட்ட மரத்தின் பாகங்களைக் காண்பித்தார்.

எனது தோட்டத்திலிருந்து எதனையாவது எடுக்கவேண்டுமென்றால் முதலில் என்னைக் கேளுங்கள் என இராணுவத்தினரிடம் தெரிவித்தேன் என அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் கஸ்டப்பட்டு உழைக்கின்றோம், மீன்பிடிக்கின்றோம், தோட்டம் செய்கின்றோம். ஆனால், அரசாங்க சம்பளத்தைப் பெறும் இராணுவம் எங்கள் தோட்டத்தில் உள்ள மரங்களில் இருந்து பழங்களை சாப்பிடுகின்றது, எங்கள் வீடுகளில் வாழ்கின்றது, எங்கள் சமூக கட்டடங்களைப் பயன்படுத்துகின்றது என கேப்பாபிலவைச் சேர்ந்த விவேகானந்தன் என்பவர் தெரிவித்தார். ஏன் அவர்களால் எங்கள் தோட்டத்தின் கனிகளை நாங்கள் உண்பதற்கு அனுமதிக்க முடியாது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட அவரது வீட்டையும் ஏனையவர்களினது வீடுகளையும் நிலங்களையும் வீதியிலிருந்து பார்க்க முடிகின்றது. அதன் பின்னால் நந்திக்கடலின் அழகிய தோற்றம் தென்படுகின்றது. அவர்கள் தெரிவிப்பதை செவிமடுக்கும் போது மனதில் வேதனையும் சீற்றமும் ஏற்படுகின்றது

அந்தப் பகுதியில் பெருமளவு நிலமிருக்கும்போது ஏன் இராணுவம் எங்கள் வீடுகளில் நிலங்களில் இருக்கின்றது?

நாங்கள் சிங்களவர்களுடன் அமைதியாக வாழ விரும்புகின்றோம், எங்கள் நிலத்தை ஆக்கிரமிப்பதன் மூலம் இராணுவம் ஏன் இதற்குத் தடை போடுகின்றது? அவர்கள் பிரபாகரன் மீண்டும் வரவேண்டும் என விரும்புகின்றனரா? என்ற இன்னொரு கேள்வியும் அவர்களிடமிருந்து எழும்பியது.

பல வருடங்களிற்கு முன்னர் எனது விஜயத்தின் போது இதேபோன்ற உணர்வுகள் வெளிப்பட்டதை நான் நினைவுபடுத்திப்பார்த்தேன். ஒவ்வொரு வருடமும் எங்கள் நிலம் மாறிக்கொண்டிருக்கின்றது, சில வீடுகள் அழிக்கப்பட்டுவிட்டன, கிணறுகள் மூடப்பட்டுவிட்டன, புதிய கட்டடங்கள் வந்துள்ளன, புதிய எல்லைகோடுகளை வரைந்துள்ளனர். அதேவேளை, நாங்கள் நட்ட வாழை பலா மரங்கள் பழம் கொடுக்க ஆரம்பித்துவிட்டன.

நான் எனது வீட்டிற்குள் நுழையும் போது எனது தந்தையினதும் தாயினதும் அன்பை உணர்கின்றேன்.□

எனக்கு இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சிலரை அவர்கள் மெனிக்பார்ம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தக காலத்திலிருந்து, கடந்த பத்து வருடங்களிற்கு மேல் தெரியும். அவ்வேளையும் அவர்கள் தங்கள் நிலத்தின் வளம், அழகு குறித்து பேசினார்கள். மீண்டும் தங்கள் நிலத்திற்கு திரும்புவதற்கு ஏங்கினார்கள். அவர்கள் அருகிலுள்ள காட்டில் மாற்று நிலங்களை ஏற்றுக்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டவேளை கூட நான் அவர்களை சந்தித்துள்ளேன். அவ்வேளை கூட அவர்கள் தங்கள் நிலங்களிற்கு மீள திரும்புவதற்கான உரிமையை வலியுறுத்தினார்கள்.

நான் கேப்பாபிலவிற்கு விஜயம் மேற்கொண்ட அன்றைய தினமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேப்பாபிலவிலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள முள்ளியவளைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். விவசாயியின் மகனான விவசாய பகுதியிலிருந்து வந்தவரான ஜனாதிபதி சிறிசேனவின் கரிசனைக்குரியவர்களாக நீண்டகாலமாக துயரத்திலும் நெருக்கடியிலும் சிக்கியிருக்கும் கேப்பாபிலவு மக்கள் காணப்படவில்லை.

யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்கள் ஆகின்றன. கேப்பாபிலவை இராணுவம் பலவந்தமாக ஆக்கிரமித்து பத்து வருடங்களாகின்றன. கேப்பாபிலவின் அனேக மக்களிற்கு அவர்கள் தங்கள் வீடுகளிற்கு, நிலங்களிற்கு மீள திரும்ப முடியாதவரை நீதி, சமாதானம், நல்லிணக்கம் ஆகியன தொடர்ந்தும் வெற்று வார்த்தைகளாகவே காணப்படும்.

நாங்கள் யுத்தத்திலிருந்து உயிர்தப்பிவிட்டோம். ஆனால், தற்போது நாங்கள் எங்கள் நிலங்களிற்காக உயிர்துறக்கவேண்டியுள்ளது என்கிறார்கள் கேப்பாபிலவு மக்கள்.

களம்

முத்துக்குமாரின் மரண வாக்குமூலம்



இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, சென்னையில் தீக்குளித்து சாவடைந்த நம் அருமைச் சகோதரன் ஈகைச்சுடர் முத்துக்குமாரின் சாவு வாக்குமூலம்! - 29.01.2009

தீக்குளிக்கப் போவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு முத்துக்குமார் வினியோகித்த துண்டு அறிக்கை

விதியே விதியே என்செய் நினைத்திட்டாய் என் தமிழ் சாதியை

அன்பார்ந்த உழைக்கும் தமிழ்மக்களே,

வணக்கம். வேலைக்குப் போகும் அவசரத்திலிருக்கும் உங்களை இப்படி சந்திக்க நேர்ந்ததற்கு நான் வருந்துகிறேன். ஆனால் வேறு வழியில்லை. என் பெயர் முத்துக்குமார். பத்திரிகையாளர் மற்றும் உதவி இயக்குநர். தற்சமயம் சென்னையில் உள்ள பத்திரிகை ஒன்றில் வேலை செய்து வருகிறேன். உங்களைப்போல் தான் நானும். தினமும் செய்தித்தாளையும், இணையத்தையும் பார்த்து பார்த்து, தினம் தினம் கொல்லப்பட்டு வரும் எம் சக தமிழர்களைக் கண்டு சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல், யோசிக்க முடியாமல் தவிக்கும் எத்தனையோ பேரில் ஒரு சாமானியன். வந்தாரை வாழ வைக்கும் செந்தமிழ் நாட்டில் சேட்டு என்றும், சேட்டனென்றும் வந்தவனெல்லாம் வாழ, சொந்த ரத்தம் ஈழத்தில் சாகிறது. அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று குரல் கொடுத்தால், ஆம் என்றோ இல்லை என்றோ எந்த பதிலும் சொல்லாமல் கள்ள மௌனம் சாதிக்கிறது இந்திய ஏகாதிபத்தியம். இந்தியாவின் போர் ஞாயமானதென்றால் அதை வெளிப்படையாகச் செய்ய வேண்டியதுதானே.. ஏன் திருட்டுத்தனமாக செய்ய வேண்டும்?

ராஜீவ்காந்தியைக் கொன்றார்கள் என்ற சொத்தை வாதத்தை வைத்துக்கொண்டு, சில தனிநபர்களின் பலிவாங்கல் சுயநல நோக்கங்களுக்காக ஒரு பெரும் மக்கள் சமுகத்தையே கொன்று குவிக்கத் துடிக்கிறது இந்திய அதிகார வர்க்கம். ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப்புலிகள் மட்டும் குற்றம்சாட்டப்படவில்லை. தமிழக மக்களையும் குற்றவாளிகள் என்று குற்றம்சாட்டியது ஜெயின் கமிசன் அறிக்கை. அப்படியானால் நீங்களும் ராஜீவ்காந்தியைக் கொலை செய்த கொலைகாரர்கள்தானா?

ஜாலியன் வாலாபாக்கில் வெள்ளையன் கொன்றான் என்றார்களே, இவர்கள் முல்லைத் தீவிலும் வன்னியிலும் செய்வதென்ன? அங்கு கொல்லப்படும் குழந்தைகளைப் பாருங்கள். உங்கள் குழந்தைகள் நினைவு வரவில்லையா? கற்பழிக்கப்படும் பெண்களைப் பாருங்கள். உங்களுக்கு அதுபோன்ற வயதில் ஒரு தங்கையோ, அக்காவோ இல்லையா? ராஜீவ் கொல்லப்பட்டபோது காங்கிரசின் முக்கிய தலைவர்கள் ஏன் அவருடன் இல்லை, கூட்டணிக் கட்சித் தலைவியான ஜெயலலிதா, தமிழ்நாட்டில் ராஜீவ் கலந்துகொள்ளும் ஆகப்பெரிய பொதுக்கூட்டத்தில் ஏன் பங்கெடுக்கபோகவில்லை என்பதுபோன்ற கேள்விகள் கேட்கப்படாமலும், இவர்களால் பதில் சொல்லப்படாமலும் கிடக்கின்றன. மக்களே யோசியுங்கள். இவர்கள்தான் உங்கள் தலைவர்களா? பணம், அடியாள் பலம் ஆகியவற்றைக் கொண்டு மிரட்டல் அரசியல் நடத்தி வரும் இவர்கள் நாளை நம்மீதே பாய மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்? அப்படி பாய்ந்தால் யார் நம் பக்கம் இருக்கிறார்கள்?

கலைஞரா? நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்வார்கள் என்று அப்பொழுதும் அவர் அறிவிப்பார். பிறகு, மத்திய அரசைப் புரிந்துகொள்வார்(?!). பிறகு மறுபடி சரியான முடிவை எடுக்க வேண்டி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவார் □ இந்த மாசம், இந்த வாரம், இதுவரைக்கும் என்ன எவனும் தொட்டதில்ல என்கிற வின்னர் பட வடிவேல் காமெடியைப் போல. காகிதம் எதையும் சாதிக்காது மக்களே! இப்பொழுது, உலகத் தமிழினத் தலைவர் என்ற பட்டப்பெயரைச் சூடிக்கொள்ளவும், தமிழ்நாட்டில் இருக்கும் பணத்தையெல்லாம் தன் குடும்பத்திற்கே உரித்தாக்கவும் விரும்புகிற தேர்தல் காலத் தமிழர் கலைஞர் மக்களின் கோபத்தை எதிர்கொள்ள பயந்து மருத்துவமனையில் போய் ஒளிந்துகொண்டுள்ளார். தனது மந்திரிகளுக்கு அவசியப்பட்ட துறைகளுக்காக சண்டப்பிரசண்டம் செய்து சதிராடிய இந்த சூரப்புலி உண்மையில் தமிழுக்காகவோ, தமிழருக்காகவோ செய்ததென்ன? ஒருமுறை அவரே சொன்னார், □தேனெடுத்தவன் புறங்கையை நக்காமலா இருப்பா□னென்று. இவருடைய பம்மலாட்டத்தையெல்லாம் பார்த்தால் ரொம்பவே நக்கியிருப்பார் போலிருக்கிறதே□

பட்டினிப் போராட்டத்தின் மூலம் களம் இறங்கியிருக்கும் சட்டக்கல்லூரி மாணவர்களே□ உங்கள் போராட்டம் வெற்றிபெற சகதமிழனாக நின்று வாழ்த்துகிறேன். உங்களோடு களம் இறங்க முடியாமைக்கும் வருந்துகிறேன். ஈழத் தமிழர் பிரச்னை என்றில்லை, காவிரியில் தண்ணீர் விடச்சொல்லும் போராட்டமென்றாலும் சரி, தமிழ்நாட்டிற்காதவரான போராட்டம் எதுவாக இருந்தாலும் சரி, முதலில் களம் காண்பவர்கள் நீங்கள், வழக்கறிஞர்களும்தான். இந்த முறையும் நான்கு மாதங்களுக்கு முன்பாகவே களத்தில் இறங்கியவர்கள் இந்த இரண்டு தரப்பும்தான். உங்களுடைய இந்த உணர்வை மழுங்கடிக்கவே திட்டமிட்டு இந்திய உளவுத்துறை ஜாதிய உணர்வைத் தூண்டிவிட்டு, அம்பேத்கர் சட்டக்கல்லூரி அனர்த்தத்திற்கு வழிவகுத்திருக்கலாம் என்பது என் சந்தேகம். உலகம் முழுக்க மக்களுக்கான புரட்சிகரப் போராட்டங்களில் முன்கையெடுப்பவர்களாக இருந்தது மாணவர்கள் என்கிற ஜாதிதான். அதேபோல், தமிழ்நாட்டிலும் உங்களுக்கு முந்திய தலைமுறையொன்று இதுபோன்ற ஒரு சூழலில், இதுபோல் குடியரசு தினத்திற்கு முன்பு களம் கண்டுதான் காங்கிரஸ் உள்ளிட்ட தேசியக் கட்சிகளைத் தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடித்தது.


ஆக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் உங்கள் கைகளுக்கு மறுபடியும் வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக உலக சரித்திரத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. கடந்த முறை நடந்ததுபோல், உங்கள் போராட்டத்தின் பலன்களை சுயநலமிகள் திருடிக்கொள்ள விட்டுவிடாதீர்கள். போராட்டத்தின் பலன்களை அபகரித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க. முதலில் செய்த விசயம் மாணவர்கள் அரசியல் ஈடுபாடு கொள்ளக்கூடாது என சட்டம் போட்டதுதான். ஆட்சிக்கு வந்த அது, தமிழின உணர்வுகளை மழுங்கடித்து, ஒட்டுமொத்த தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் ஜாதியாக மாற்றியது. அந்த மரபை அடித்து உடையுங்கள். மனு கொடுக்கச் சொல்பவன் எவனாக இருந்தாலும், அவனை நம்பாதீர்கள். நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் போன்ற வேறுபாடுகளை எரித்துக்கொள்ள இதுதான் தருணம். உண்ணாவிரதத்தையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு களம் காணுங்கள். உண்மையில், இலங்கையில் இந்திய ராணுவ நடவடிக்கை என்பது தமிழர்களுக்கெதிரானது மட்டுமல்ல. ஒட்டுமொத்த இந்தியர்களுக்குமே எதிரானது. சிங்களச் சிப்பாய்களிடம் கற்றுக்கொள்கிற பாலியல் நுணுக்கங்களைத்தானே அவர்கள் அசாமில் அப்பாவிப் பெண்களிடம் பரிசோதித்துப் பார்த்தார்கள்! விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்கான சிங்கள வன்முறை நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு வடகிழக்கு மாநிலப் போராளிகளிடம் பயன்படுத்திக் கூர் பார்த்தார்கள்! போதாதற்கு, ஹைட்டியில் சமாதானப் பணிக்காக அனுப்பப்பட்ட ஐ.நா.வின் ராணுவத்திலிருந்து இந்திய மற்றும் இலங்கை ராணுவம் அவரவர்களுடைய பாலியல் நடவடிக்கைகளுக்காக அடித்துத் துரத்தப்பட்டிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது □ இந்தக் கூட்டணி கொள்கைக் கூட்டணியல்ல, பாலியல் கூட்டணி என்றல்லவா!, ஆக இந்திய □ இலங்கை இராணுவக் கூட்டு என்பது இந்தியர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கும் கூட எதிரானதாக இருப்பதால், அகில இந்திய அளவில் மாணவர்கள், ஜனநாயக அமைப்புகளையும் உங்கள் பின்னால் திரட்டுங்கள்.

இதையெல்லாம் மக்களே செய்ய முடியும். ஆனால், அவர்கள் சரியான தலைமை இல்லாமல் இருக்கிறார்கள். உங்கள் மத்தியிலிருந்து தலைவர்களை உருவாக்குங்கள். உங்கள் போராட்டத்தை சட்டக்கல்லூரி மாணவர்கல் என்ற இடத்திலிருந்து அனைத்து மாணவர்கள் என்று மாற்றுங்கள். உங்களிடமிருக்கும் வேகமும், மக்களிடமிருக்கும் கோபமும் இணைந்து தமிழக வரலாற்றை அடியோடு மாற்றட்டும். ஆன்பலம், பணபலம், அதிகார வெற்றியை உடைத்து எறியுங்கள். உங்களால் மட்டுமே இது முடியும். □நாங்கள் தமிழ் மாணவர்கள், தமிழ்நாட்டின் உயிரானவர்கள், இங்கு தமிழினம் அமைதிகொண்டிருந்தால் ஏடுகள் தூக்கி படிப்போம். எங்கள் தமிழர்க்கின்னல் விளைந்தால் எரிமலையாகி வெடிப்போம்□ என்ற காசி அனந்தனின் பாடலை ஓர் அறிவாயுதமாக ஏந்துங்கள்.. என் உடலை காவல்துறை அடக்கம் செய்துவிட முயலும். விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதை புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள். எனக்கு சிகிச்சையோ, போஸ்ட்மார்டமோ செய்யப்போகும் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரி மாணவர்களே.. உங்கள் கையால் அறுபட நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். காரணம், அகில இந்திய அளவில், மருத்துவக் கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக உயர்சாதி மாணவர்கள் போராடிக்கொண்டிருக்க, தன்னந்தனியாக நின்று, மருத்துவக் கல்வியில் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாகப் போராடியர்களல்லவா நீங்கள்? எனக்கு செய்வதெல்லாம் இருக்கட்டும். நம் சகோதரர்களான ஈழத்தமிழர்களுக்கு உங்கள் பங்குக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

9ஆம் பக்கம் பார்க்க...

ஜனாதிபதித் தேர்தல்: பேரம் பேசும் சக்தியை இழந்த சிறுபான்மையினர்

எம்.எஸ்.எம்.ஐயூப்



கடந்த வருடம் ஆரம்பத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு வகையில் அரசியல் அநாதையாகி இருந்தார். அவரது எதிர்காலமே, பயங்கரமானதாகத் தென்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம், நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் மூலம், இது தெளிவாகத் தெரிந்திருந்தது. ஆனால், இன்று அவர், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட, அதுவும் மஹிந்த அணியின் ஆதரவுடன் போட்டியிடத் தயாராகும் நிலைக்குத் தமது நிலையைப் பலப்படுத்திக் கொண்டுள்ளார்.

கடந்த வருடம் ஆரம்பத்தில், அவர் தம்மைப் பதவிக்குக் கொண்டு வந்த ஐக்கிய தேசிய கட்சியிடமிருந்து முற்றாக அந்நியப்படுத்தப்பட்டு இருந்தார். அதேவேளை, தம்மை ஆறடி நிலத்தடிக்கு அனுப்ப முயற்சித்ததாக, அவரே குற்றஞ்சாட்டிய மஹிந்த அணியும் அவரைப் புறக்கணித்து இருந்தது.

அதேவேளை, மஹிந்த அணி, மீண்டும் பதவிக்கு வரும் நிலையும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் மூலம் தெரிய வந்தது. எனவே தான் அவர், கடந்த வருடம் அரசியல் அநாதையாகி இருந்தார் என்றோம்.

ஆனால், திடீரென மஹிந்தவைப் பிரதமராக நியமித்தும், சட்ட விரோதமான முறையில் நாடாளுமன்றத்தைக் கலைத்தும், மஹிந்த அணியின் மத்தியில் வீரனாகி, இன்று அவர், அதே அணியின் உதவியுடன் ஜனாதிபதித் தேர்தலில், மீண்டும் போட்டியிடலாமோ என்று சிந்திக்கும் நிலைக்கு வந்துவிட்டார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு, இன்னும் சுமார் பத்து மாதங்கள் இருக்கின்றன. "பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக் காலமான ஐந்து வருடங்கள், பூர்த்தியடைவதற்கு ஒரு மாதத்துக்கும், இரண்டு மாதங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும்" என அரசமைப்புக் கூறுகிறது.

அதாவது, எதிர்வரும் நவம்பர் ஒன்பதாம் திகதிக்கும் டிசெம்பர் ஒன்பதாம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில், அத் தேர்தல் நடைபெற வேண்டும்.

ஆயினும், இப்போதே ஜனாதிபதித் தேர்தல் மக்கள் மத்தியில் பேசுபொருளாகியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி தவிர்ந்த, ஏனைய பிரதான அரசியல் கட்சிகளுக்கு, ஜனாதிபதித் தேர்தலுக்கான தமது வேட்பாளர் யார் என முடிவு செய்து கொள்ள முடியாமையே இந்த அசாதாரண ஆரவாரத்தைத் தூ ண்டியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணிக்குள் தனி நபர்களின் சொந்த நலன்களுக்கு இடமில்லை. அதேவேளை, வெற்றி பெறும் நோக்கத்தில் அக்கட்சி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில்லை. தமது கட்சிக் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக, குறிப்பிட்ட ஓர் அரசியல் போக்கை நிறுத்துவதற்காகவே, ஜனாதிபதித் தேர்தல்களை அக்கட்சி பாவித்து வந்துள்ளது.

ஆனால், ஏனைய கட்சிகளைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலானது தனி நபர்களின் நலன்களுக்காகக் கட்சியைப் பாவிக்கும் ஒரு சந்தர்ப்பமாகும். குறிப்பிட்ட ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்து, அவர் மூலம் கட்சியிலுள்ள ஒரு சிலர் பொருளாதார ரீதியில் பலம் பெறுவதே அக்கட்சிகளில் இடம்பெறுகிறது.

இதை விளங்கிக் கொள்ளாத சாதாரண மக்கள், வெற்றி பெறும் அணியில் தாமும் இருக்க வேண்டும் என்ற ஆசையில் அல்லது சில வேட்பாளர்களின் வாக்குறுதிகளை நம்பியும் ஏதோ ஒரு கட்சியின் வேட்பாளரை ஆதரிக்கிறார்கள். பின்னர் ஏமாந்து விடுகிறார்கள்.

மூன்று கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதே இந்நாள்களில் பேசுபொருளாகியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகப்பற்றற்ற முறையில் தலைமை தாங்கும் தாமரை மொட்டுக்கட்சி எனப் பொதுவாக அழைக்கப்படும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அந்த மூன்று கட்சிகளாகும்.

நாம், ஏற்கெனவே கூறியதைக் போல், அவற்றின் ஜனாதிபதி வேட்பாளர்கள் இன்னமும் நிர்ணயிக்கப்படாத காரணத்தாலேயே இந்த விடயத்தில் இந்த அசாதாரண ஆர்வம் காணப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கி, மஹிந்த ராஜபக்ஷவை அப் பதவிக்கு நியமித்த போது, அந்த நிலைமையை உருவாக்கியவர் ரணிலே என்றதொரு கருத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பரவியது.

அத்தோடு,முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மகன் சஜித் பிரேமதாஸவே, கட்சித் தலைமையை ஏற்க வேண்டும் என்றும் பலர் பகிரங்கமாகவே கூறத் தொடங்கினர். கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தோல்விக்கு காரணமும் ரணிலே எனப் பலரும் கூறினர். இந்த நிலையில், ரணிலுக்குக் கூடுதலான வாய்ப்புகள் இருந்த போதிலும், ஐ.தே.கவின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பான விடயம், சற்று சிக்கலான விடயமாக இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கும் பலம், சிறுபான்மை மக்களின் வாக்குகளாகும். குறிப்பாக, தமிழ், முஸ்லிம் மக்கள், கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இருந்த நிலையிலிருந்து, அவ்வளவாக மாறியதாகத் தெரியவில்லை. ஆனால், ரணில், சிறுபான்மை மக்களை வென்றதைப் போல், சஜித் வென்றெடுப்பாரா என்பதும் அக்கட்சி முன்னுள்ள ஒரு சவாலாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, சிறுபான்மை மக்கள் ஓரணியாக நின்று ஐ.தே.கவை ஆதரித்தாலும் அதன் பயனை அடைய, ஐ.தே.கவால் முடியாது. ஏனெனில் இப்போது ஐ.தே.கவுக்கும் மஹிந்த அணியினருக்கும் இடையிலான வாக்கு வித்தியாசத்தை நிறப்ப, சிறுபான்மை வாக்காளர்களால் முடியாது. அதாவது 2010 ஆம் ஆண்டு, ஜனாதிபதித் தேர்தலில் போல் சிறுபான்மை மக்கள் தமது பேரம் பேசும் சக்தியை இழந்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்கும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, இப்போது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் மிக நெருக்கமாக இருக்கிறது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்களின் போது, இரு கட்சிகளும் கூட்டாகப் போட்டியிடுவது தொடர்பாகவும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அது தொடர்பாக இரு சாராரும் பேச்சுவார்த்தைகளையும் நடத்தி வருகின்றனர். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் இரு சாராரும் உடன்பட முடியாத நிலையில் இருப்பதாகவே தெரிகிறது.

தாமே இரு கட்சிகளின் சார்பிலும் ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது நெருங்கிய சகாக்களான மஹிந்த சமரசிங்க போன்றோர் மூலம் பகிரங்க மேடைகளில் கூறச் செய்கிறார்.

மஹிந்தவுக்குத் தற்போதைய சட்டத்தின் படி, மூன்றாவது முறையாகப் போட்டியிட முடியாது என்பதாலும் அவரது சகோதரர்களான கோட்டாபய, பசில் ஆகியோருக்கும் அவர்களது அமெரிக்க குடியுரிமை காரணமாகப் போட்டியிட முடியாது என்பதாலும், மஹிந்த அணியினர் தம்மை ஆதரிப்பர் என ஜனாதிபதி நினைக்கிறார் போலும்.

ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தினர் தம்மைப் பதவியிலிருந்து விரட்டிய மைத்திரிக்கு வாய்ப்பளிப்பார்கள் என நம்ப முடியாது. மைத்திரி அன்று செய்ததை அவர்கள் மறக்க மாட்டார்கள்.

இப்போது மைத்திரியிடம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் இருப்பதால், அதைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்காக அவர்கள் மைத்திரியோடு நற்புறவு பேணி வந்த போதிலும், கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே மைத்திரியைப் பாதாளத்தில் தள்ளிவிடுவார்கள். அவருக்கு ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை மஹிந்த அணியினர் ஒருபோதும் வழங்கப்போவதில்லை.

ஆனால், மைத்திரிக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்றில், அவர், தமது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட வேண்டும். ஆனால், அதன் மூலம் அவர் வெற்றிபெறப் போவதில்லை. கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களின் போது, அவரது தலைமையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சின்னத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சின்னத்திலும் போட்டியிட்டவர்கள் மொத்தம் 15 இலட்சம் வாக்குகளையே பெற்றார்கள். மஹிந்தவின் பொதுஜன முன்னணி 47 இலட்சம் வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 36 இலட்சம் வாக்குகளையும் பெற்றன.

இந்த நிலைமை மாறியிருப்பதாகத் தெரியவில்லை. மாறியிருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில், மைத்திரி வெற்றி பெறும் அளவுக்கு மாற்றங்கள் ஏற்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலில், மைத்திரி போட்டியிடுவதற்கான இரண்டாவது வழி என்னவென்றால், அவர் தமது பதவிக்காலம் முடிவடையுமுன் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

ஜனாதிபதி ஒருவர் தமது முதலாவது பதவிக் காலத்தின் முதல் நாளிலிருந்து நான்கு ஆண்டுகள் சென்றதன் பின்னர், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மற்றொரு முறை ஜனாதிபதியாவதற்கான தமது விருப்பத்தைத் தெரிவித்து, மக்கள் ஆணையைக் கோர முடியும் என அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, இந்த வருடம் ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதிக்குப் பின்னர், தமது பதவிக் காலம் முடிவடையும் முன், அவர் ஜனாதிபதித் தேர்தலொன்றை நடத்தினால் அதில் அவர் கட்டாயம் போட்டியிட வேண்டும்.

ஆயினும், அப்போதும் மஹிந்த அணியினர் அவருக்கு எதிராக வேட்பாளர் ஒருவரை நிறுத்துவர். எனவே, இனி மைத்திரி ஜனாதிபதியாக வரும் வாய்ப்புகள் தெரிவதற்கில்லை.

ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் மஹிந்த அணிக்கே கூடுதல் வாய்ப்புள மஹிந்த அணி ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் குழப்பத்தில் இருப்பதாகவே தெரிகிறது. ஒரு புறம் கோட்டாபய ராஜபக்ஷ, "நான் போட்டியிடத் தாயார்" என அண்மையில் கூறியிருந்தார். தாம், தமது அமெரிக்க குடியுரிமையை கைவிட்டுப் போட்டியிடத் தாயர் என்றே கோட்டா கூறுகிறார்.

அதேவேளை, ராஜபக்ஷ சகோதரர்களில் மூத்தவரான முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் நானும் தயார் எனக் கூறியிருந்தார். மஹிந்த போட்டியிடச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. பசில் அமெரிக்க குடியுரிமையை கைவிட விருப்பமில்லையோ என்னவோ, அவர் தாம் போட்டியிடுவதாகக் கூறுவதே இல்லை.

அவ்வாறாயின் தமது மகன் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்ற மஹிந்தவின் கனவு நனவாகாது போகலாம்.

இது மஹிந்தவுக்கு இருக்கும் ஒரு கவலை. அதற்காகத் தமது குடும்பத்திலல்லாத தினேஷ் குணவர்தன போன்ற ஒருவரை ஜனாதிபதியாக்கவும் அவர் விரும்புவார் எனக் கூற முடியாது.

ஏனெனில் எவ்வளவு தான் நம்பிக்கைக்குரியவராக இருந்தாலும், நாட்டின் மிகப் பலம் வாய்ந்த பதவியைக் கைப்பற்றிக் கொண்டதன் பின்னர், எவரும் தொடர்ந்தும் தமக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவார் என்பதற்கு, எவ்வித உத்தரவாதமும் இல்லை. அந்த அணியில் எவர் போட்டியிட்டாலும் மஹிந்த இந்தப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இது போன்ற பிளவுகள் இல்லாமல் மஹிந்த அணியினர் களத்தில் இறங்கினால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர்களுக்கே கூடுதல் வாய்ப்பு இருக்கிறது என தெரிகிறது.

ஏனெனில், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அவர்கள் சுமார் 47 இலட்சம் வாக்குகளைப் பெறும் போது, ஐ.தே.க 36 இலட்சம் வாக்குகளையே பெற்றது. மைத்திரி அணி 15 இலட்சம் வாக்குகளையே பெற்றது.

சிலவேளை வாக்குகளை எண்ணும் போது, முதலாவது சுற்றில் அவர்கள் இந்த இலக்கை அடையாதிருக்கலாம். ஆனால், இப்போது இருக்கும் நிலையில், ஏனைய வேட்பாளர்களுக்கு எவ்வகையிலும் மஹிந்த அணியின் வேட்பாளரை நெருங்கவே முடியாது.

LIFE INSURANCE

Mortgage Insurance
Line of Credit Insurance

Term Life Insurance / Mortgage Insurance							
Age		25		40		50	
		M	F	M	F	M	F
200k	T20	17	14	27	20	65	47
500k	T20	35	24	54	35	144	94
Permanent Life Insurance - Premium Never Change							
200k	WL	81	71	150	131	233	200
500k	WL	188	164	364	313	590	488
Critical Illness Insurance 100% Money Back							
50k	T75	44	42	90	85	177	148
100k	T75	76	72	157	145	321	265

Living Benefits / Income Replacement


* if you get sick, accident or Soft tissue injury
* for self employed
* for business people
  if you don't have benefits
* 2 years, 5 years up to age 70 (long term disablity)
claim எடுக்காவிட்டால் 50% பணம் மீள பெறமுடியும்

20 வருடம் மட்டும் பணம் செலுத்தும் காப்புறுதி

இருபது வருடங்களுக்கு பின் பணம் கட்ட வேண்டியதில்லை. அனால் வாழ் நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும். 20 வருடங்களுக்கு பின் விரும்பினால் காசு பெறுமதியை (Cash value) பெறமுடியும்.

மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாத காப்புறுதி

20 YEARS NON-MEDICAL TERM INSURANCE		
Age	$100k M/F	$200k M/F
30	$21/18	$36/28



இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Philip Chandran
Liland Insurance
416-450-9043
philipsam0715@hotmail.com

INCOME TAX (22 years experience)
* All year round, any tax problem with CRA, I can resolve it.
* new business registration * Accounting
* Bookkeeping * Payroll, HST


Super visa, RRSP Loan, RESP (Education), Travel Insurance
கொடிய நோய்களுக்கான காப்புறுதி (critical illness) for 25 sickness நோய் வராத பட்சத்தில் கட்டிய பணம் முழுக்க மீள் பெற முடியும்

ABC Driving School

Pickering, Ajax, Whitby & Oshawa

Tony (Easan)
Tel: 416.414.4942
Email: abcdrivingschool@gmail.com

Exam Car Available





COMMUNITY TRANSIT SERVICES

COMMUNITY TRANSIT SERVICES

- Grocery Shopping
- School Transport
- Ariport Service
- Tour Service
- Party Pickup
- Family Shopping
- Senior Transit
- Food Delivery
- Doctor Appointment

Tina +1 647 677 6109
Shan +1 416 907 8888
communitytransitservice
communitytransitservice
communitytransitservice.com
communitytranscare@gmail.com



"Call me today for a free home and auto insurance quote!"

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி
HOME + AUTO = MORE SAVINGS*

Allstate
You're in good hands



RAJI LINGHAN
Agent
CELL: 416-817-5060
289-460-3217
905-427-2827 Ext 5020

*Inclusive of all other discounts applied to Allstate's base rates. Terms and conditions apply and may vary by region. Rates and discounts subject to change. ®Trademark used under licence by Allstate Insurance Company

பர்ணான்டோ
கருவாட்டுக்கடை



- கட்டா கருவாடு
- அறக்குளா கருவாடு
- சுறா கருவாடு
- சூரை கருவாடு Balay
- நெத்தலி கருவாடு
- பொம்பிலி கருவாடு



எல்லா வகையான கருவாடுகளும் நேரடியாகவும், அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கேட்டு வாங்கலாம்!

எமது புதிய முகவரி:

3441 St.Clear Ave., East
Birchmount Rd and Warden Ave. க்கு இடையில் அமைந்துள்ளது.

647-857-1336

முத்துக்குமாரின் மரண வாக்குமூலம்

தமிழீழம் என்பது தமீழத்தின் தேவை மட்டுமே அல்ல, அது தமிழகத்தின் தேவையும் கூட காரணம், இராமேஸ்வரம் மீனவர்கள், உலகில் ஆடு, மாடுகளைப் பாதுகாப்பதற்குக் கூட சட்டமும், அமைப்புகளும் இருக்கின்றன. இராமேஸ்வரம் தமிழனும், ஈழத்தமிழனும் மாட்டைவிட, ஆட்டைவிடக் கேவலமானவர்கள்? எல்லை தாண்டி போகும் மீனவர்கள், புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தாக்கப்பட்டு வருவதாக இந்திய மீடியா திட்டமிட்டு பிரச்சாரம் செய்து வருகிறது. இவர்களெல்லாம் செய்தித்தாளே படிப்பதில்லையா? சென்னையின் கடற்கரைகளில் அடிக்கடி தைவான் நாட்டை சேர்ந்த மீனவர்கள் வழிதெரியாமல் வந்தவர்கள் என்று கைது செய்யப்படுகிறார்கள். பல ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தூரத்திலிருக்கும் தைவான் மீனவன் வழிதவற முடியுமென்றா, வெறும் பன்னிரெண்டு மைல் தூரத்திற்குள் இராமேஸ்வரம் தமிழன் வழிதவறுவது நம்புவது மாதிரியில்லையாமா?

தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த சகோதரர்களே,

உங்கள் சொந்த மாநிலத்தில் கூட இல்லாத நிம்மதியோடும், பாதுகாப்போடும் வாழக்கூடிய மாநிலம் தமிழ்நாடுதான் என்பது உங்களுக்கு அனுபவத்தால் தெரிந்திருக்கும். நாங்கள் இன்று பெரும் இக்கட்டை எதிர்நோக்கியிருக்கிறோம். ஈழத்திலிருந்துக்கும் எங்கள் சகோதரர்கள் இந்தியர் என்னும் நம் பெயரைப் பயன்படுத்திதான் நம் அரசால் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் நாங்கள் தனித்துவிடப்படுவதை இந்திய அரசு விரும்புகிறது. அப்படி ஆக்கக்கூடாதென நாங்கள் விரும்புகிறோம். ஆகவே, போராடிக்கொண்டிருக்கும் எங்கள் சகோதரர்களுக்கு உங்கள் ஆதரவும் உள்ளதென மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துங்கள். அரசுகளில் அங்கம் வகிக்கக்கூடிய உங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களை எம் கரத்தை பலப்படுத்துவதோடு, எதிர்காலத்தில், ஒரு நவநிர்மாண் சேனாவோ, ஸ்ரீராம் சேனாவோ தமிழ்நாட்டில் உருவாகவிருக்கும் ஆபத்தைத் தவிர்க்கும் என்பது என் கருத்து.

தமிழ்நாடு காவல்துறையிலிருக்கும் இளைஞர்களே,

உங்கள் மீது எனக்கு இருக்கும் மதிப்பு கொஞ்சம் நஞ்சமல்ல, காரணம், தமிழுக்காக மற்றவர்கள் என்ன செய்தார்களோ, அலுவலர்களை ஐயா என அழைப்பது போன்ற நடைமுறை ரீதியில் தமிழை வாழ வைத்துக்கொண்டிருப்பவர்கள் நீங்கள்தான். மக்களுக்காகப் பாடுபடவேண்டும், சமூக விரோதிகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதுபோன்ற உன்னத நோக்கங்களுக்காகத்தான் நீங்கள் காவல்துறையில் இணைந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஆனால், அதை செய்ய விடுகிறதா ஆளும் வர்க்கம்? உங்களை சிறுசிறு தவறுகள் செய்ய விடுவதன் மூலம் தன்னுடைய பெருந்தவறுகளை மறைத்துக்கொள்ளும் அதிகார வர்க்கம், உங்களை, எந்த மக்களுக்காகப் பாடுபட நீங்கள் விரும்பினீர்களோ, எந்த மக்களுக்காக உயிரையும் கொடுக்கலாம் என்று தீர்மானித்தீர்களோ, அந்த மக்களுக்கெதிராகவே, பயிற்றுவிக்கப்பட்ட அடியாள்களாக மாற்றுகிறது. டெல்லி திகார் ஜெயிலைப் பாதுகாப்பது தமிழக போலீஸ்தான். இந்தியாவில் பழமையான காவல்துறையான தமிழக காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வரும் காவல்துறைகளில் ஒன்று. ஆனால் அந்த மதிப்பை உங்களுக்குக் கொடுக்கிறதா இந்திய அரசாங்கம்! மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தமிழகம் வந்து திரும்பிப்போகையில், சென்னை விமான நிலையத்தில், அவருக்கான பாதுகாப்பை வழங்க அனுமதிக்க மறுத்திருக்கிறார்கள் மத்திய காவல் அதிகாரிகள். ஏனென்று கேட்டதற்கு, ராஜீவ் காந்தியை நீங்கள் பாதுகாத்த லட்சணம் தான் தெரியுமே என்று கிண்டல் செய்திருக்கிறார்கள். ராஜீவ்காந்தியைத் தமிழக காவல்துறையால் காப்பாற்ற முடியவில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதே அளவுக்கு உண்மை, ராஜீவோடு இறந்தவர்களில் பலர் அப்பாவி போலீஸ்காரர்கள் என்பது. உங்கள் அர்ப்பணிப்புணர்வு கேள்விக்காப்பாற்பட்டது. ஆனால் மேற்படி வெண்ணெய் வெட்டி வீரர்கள் - அதுதான், இந்திய உளவுத்துறை - ராஜீவின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்ற தகவலை அறிந்தபோதும் மெத்தனமாக இருந்தது என்பது பின்னர் அம்பலமானதல்லவா, இதுவரை காலமும் நீங்கள் அப்பாவி மக்களுக்கெதிராக இருந்தாலும் தமிழகத்தின் பெருமைகளில் ஒன்றாகத்தான் இருக்கிறீர்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த தருணத்தில், நீங்கள் மக்கள் பக்கம் இருந்தால் மட்டுமே மக்களிடம் இழந்திருக்கிற பெருமையை மீட்டெடுக்க முடியும். ஒருமுறை சக தமிழர்களுக்காக அர்ப்பணித்துப்பாருங்கள். மக்கள் உங்களை தங்கத்தட்டில் வைத்து தாங்குவார்கள். தமிழனின் நன்றி உணர்ச்சி அளவிடற்கரியது. தன்னுடைய சொந்தக்காசை வைத்து அணை கட்டிக்கொடுத்தான் என்பதற்காகவே அவனுக்கு கோயில் கட்டி. தன் பிள்ளைகளுக்கு அவன் பெயரை வத்துக் கொண்டாடிக்கொண்டிருக்கிறான் முல்லையாற்றின் மதுரை மாவட்டத்தமிழன். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், கொந்தளிக்கப் போகும் தமிழகத்தில், மத்திய அரசு அதிகரிகளுக்கு ஒத்துழைக்க மறுப்பது, ரா, சி.பி.ஐ போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களை உள்ளூர் மக்களுக்கு அடையாளம் காட்டுவதும்தான். இதை மட்டுமாவது செய்யுங்கள். மற்றதை மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

களத்தில் நிற்கும் தமிழீழ மக்களே, விடுதைலைப் புலிகளே,

அனைத்துக்கண்களும் இப்போது முல்லைத்தீவை நோக்கி. தாய்த் தமிழகம் உணர்வுபூர்வமாக உங்கள் பக்கம்தான் நிற்கிறது. வேறு ஏதாவது செய்ய வேண்டும் எனவும் விரும்புகிறது. ஆனால் என்ன செய்வது உங்களுக்கு அமைந்தது போன்ற உன்னத தலைவன் எங்களுக்கில்லையே, ஆனால், நம்பிக்கையை மட்டும் கைவிடாதீர்கள். இதுபோன்ற கையறுகாலங்கள்தான். தமிழகத்திலிருந்து அப்படி ஒருவர் இந்தக் காலத்தில் உருவாகலாம் அதுவரை, புலிகளின் கரங்களை பலப்படுத்துங்கள். 1965ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போரை சில சுயநலமிகளின் கையில் ஒப்படைத்ததால்தான் தமிழக வரலாறு கற்காலத்திற்கு இழுபட்டுள்ளது. அந்தத் தவறை நீங்கள் செய்து விடாதீர்கள்.

அன்பிற்குரிய சர்வதேச சமூகமே, நம்பிக்கைக்குரிய ஒபாமாவே,

உங்கள் மீது எங்களுக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. ஆனால், இறையாண்மை கொண்ட ஒரு குடியரசு தம் குடிமகனை இனஒதுக்கல் மூலமாக கொடுமைப்படுத்தாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. வசதிக்காக அமெரிக்காவின் கடந்த காலத்தையே எடுத்துக்காட்டாக சொல்லலாம். உலகப்புகழ் பெற்ற குத்துச்சண்டை மாவீரன் முகமதலி சொன்னானே, என் சருமத்திலிருக்கும் கொஞ்ச வெண்மையும் கற்பழிப்பின் மூலமாகவே வந்திருக்குமென்று. நீங்கள் அமைதியாக இருக்கும் வரை இந்தியா வாயே திறக்காது. ஒட்டுமொத்த தமிழர்களும் அழிக்கப்பட்ட பிறகு வேண்டுமானால் அது நடக்கும். அதுவரை, இந்தியாவின் வாயைப் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா? வன்னியில், விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர்தான் நடக்கிறது என்கிறார்கள். புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என்கிறார்கள். அப்படியானால் அரசு சொன்ன பகுதிக்கு வந்த மக்களை ஏன் கொலை செய்தார்கள்? இது ஒன்று போதுமே, தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளைச் சார்ந்து நின்றாலும் சரி, இலங்கை அரசைச் சார்ந்து நின்றாலும் சரி, தமிழர்கள் என்ற காரணத்திற்காகவே அவர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதற்கு. இது இனப்படுகொலை இல்லையா? இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆயுதம் கொடுத்தும், ஜப்பான் பணம் கொடுத்தும், கூடுதலாக, இந்தியா நாட்டாமை செய்தும் தமிழர்களைக் கொள்கின்றனரென்றால். நீங்கள் உங்கள் மௌனத்தின் மூலமாகவும், பாராமுகத்தின் மூலமாகவும் அதே கொலையைத்தான் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை ஏன் உணரவில்லை? ஆயுதம் தாங்கி போராடுவதால் மட்டுமே யாரும் தீவிரவாதியாகிட மாட்டார்கள். அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார். மறத்திற்கும் அ.்தே துணை என்று பாடியுள்ளான் எங்கள் திருவள்ளுவர்.

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்கிறார் ஜெயலலிதா - என்னவோ பிரச்சினையே புலிகள் ஆயுதம் அடுத்ததால்தான் வந்தது என்பதைப் போலெ.. உண்மையில், புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரணகர்த்தாக்கள் அல்லர் (They are not the reason: just an outcome)

இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டிருப்பது வெளிப்படையாகாத வரை, இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதில் தலையிட முடியாது என்றது. சீனா, பாகிஸ்தான் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையில் ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதற்காக செய்வதாகச் சொன்னது. நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்திய, மும்பை தொடர்வெடிகுண்டுகள், பிறகு அண்மையில் நடந்த தாக்குதல் எனப் பலவாறாக இந்திய மக்களைக்கொன்று குவித்த பாகிஸ்தானோடு இணைந்து கொண்டு தமிழர்களைக் கொன்று குவிக்கிறது. அப்படியானால், பாகிஸ்தானின் இந்தியா மீதான பயங்கரவாதமென்பது, இந்தியா-பாகிஸ்தான் இருதரப்பு அதிகார வர்க்கங்களும் தங்கள் மக்களைச் சுரண்ட பரஸ்பர புரிதலுடன் உருவாக்கிக் கொண்ட ஒன்று என்ற எம் சந்தேகம் ஒருபக்கம் இருக்க, இப்போது, விடுதலைப்புலிகள் தீவிரவாதிகள் அதனால்தான் சண்டை என்கிறது. ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்கிறது. ராஜீவ்காந்தி ஒரு கவுன்சிலரோ, மாவட்டச் செயலாளரோ அல்ல. அவ்ரை ஏற்கனவே ஒருமுறை கொலை செய்யும் முயற்சி இலங்கையில் நடைபெற்றிருந்த போதும் அந்தக் கொலைகாரன் விசாரிக்கப்படவில்லை. ராஜீவ்காந்தியைக் கொல்ல முயன்ற அந்த சிங்கள வீரன் ஆகியோரையும் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இணைத்துக்கொண்டு மறுபடியும் விசாரிக்கப்பட வேண்டும் என்பது என் கோரிக்கைகளில் ஒன்று. ராஜீவ் மீது புலிகளுக்கு வருத்தம் இருந்திருக்கலாமே தவிர, கோபம் இருந்திருக்க வாய்ப்பில்லை. காரணம், ராஜீவ் இந்திராவின் புதல்வர். இந்திரா, தமிழீழத்தின் சிறுதெய்வங்களில் எம். ஜி.ஆருக்குப் பக்கத்திலிருப்பவர்.

இந்தியா சொல்லும் காரணங்கள் அடிக்கடி மாறுவதிலிருந்தே இந்தியா நியாயத்திற்குப் புறம்பாகத்தான் இந்தப்போரில் ஈடுபட்டிருப்பது அம்பலமாகி இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழலில் நீங்கள் ஏன் நேரடியாகத் தலையிடக்கூடாது? புலிகள் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஆயுதம் குவிக்கிறார்கள் என்றது இலங்கை. சந்திரிகாவோ, ரணிலோ, மகிந்தாவோ கடந்த காலங்களில் ஒரு கடவுளாக அல்ல, மனிதர்களாகக்கூட நடந்துகொண்டதில்லை. இவர்கள் ஒரு நிர்பந்தத்தின் பெயரில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுவிட்டார்கள். என்பதால் மட்டுமே போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும். புனரமைப்புப் பணிகளில் ஈடுபடக்கூடாது என்று எதிர்பார்ப்பது என்னவகை நியாயம்? தாங்கள் நேர்மையாக நடந்துகொள்வோம் என்ற நம்பிக்கையை உண்டாக்குவது மூலமாக மட்டுமே போராளிகளை-ஆயுதத்தைக் கீழே வைக்கச்செய்ய முடியும். கடந்த கால அரசுகள் எவையும் அப்படி செயல்படவில்லை.

11ஆம் பக்கம் பார்க்க...

மே18 தமிழின அழிப்பு நாள் நிகழ்வு-பொதுக்கூட்டமும் ஊடக சந்திப்பும்

வணக்கம்

அன்பார்ந்த தமிழ் உறவுகளே, ஊடகங்களே...

2009 மே மாதம் 18ம் திகதி உலகத்தமிழர் வரலாற்றில் மறக்க முடியாத நாள், எம்மக்கள் உலகத்தால் கைவிடப்பட்டு ஸ்ரீலங்கா இனவாத அரசால் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட நாள். இலட்சக்கணக்கான மக்களின் குருதி சிந்திய நாள். அந்த கொடிய நாள், இவ்வாண்டோடு பத்து வருடங்களைக் கடந்து நிற்கின்றது. இந்த பத்து ஆண்டுகளில் எமது விடுதலைப் போராட்டத்தையும், எமது மக்களின் இனப்படுகொலையையும், இது சார்ந்த நியாயங்களையும் சர்வதேச சமூகத்திற்குப் பல வழிகளில் நாம் எடுத்துச் சொல்லிக் கொண்டு தான் இருக்கின்றோம், ஆனாலும் எம்மக்களின் படுகொலைகளுக்கும், மக்கள் சிந்திய இரத்தத்திற்கும் இன்னும் நியாயம் கிடைக்கவில்லை. 2004 பொங்கு தமிழ் நிகழ்வின் மூலம் கனடா தமிழர்களாகிய நாம் சர்வதேசத்திற்கு எம் ஒற்றுமையையும் அரசியல் நிலைப்பாட்டையும் தெளிவாகக் காட்டியிருந்தோம். உறவுகளே, கடந்ததை மறவாமல் நடக்க வேண்டியதை உதறாமல் நம் தேசத்தின் விடுதலையில் அயராது பயணிப்போம் வாருங்கள். நாம் முன்நின்று செயலாற்றுவோம் என்ற நம்பிக்கையில் தங்கள் உன்னதமான உயிர்களை உவந்தளித்த எம் தேசத்தின் மக்களை, மாவீரரை அவர்கள் நம்பிக்கையை நாம் மறக்கவோ மறுதலிக்கவோ முடியாது. இந்த ஆண்டை ஈழத்தமிழனின் ஆண்டாக, எழுச்சி மிகுந்த ஆண்டாக மாற்றுவோம். மௌனித்தது ஆயுதங்கள் மட்டுமே எங்கள் உரிமைக்கான குரல்கள் இல்லை. எங்கள் கரங்கள் இணைந்தால், எங்கள் பலங்கள் ஒருங்கிணைக்கப்பட்டால் நாம் பலம் மிக்கவர்களாய் உலகத்தில் எம் நியாயத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்து செல்ல முடியும். உங்கள் உணர்வுகளை, எம் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லுங்கள். நாம் தோற்ற இனம் இல்லை விழுத்தப்பட்ட இனம். துரோகத்தாலும் சதிகளாலும் அழிக்கப்பட்ட இனம். விழுந்த இடத்திலிருந்து நாம் வேகமாக இன்னும் பலம் கொண்டு எழ வேண்டும். எங்கு விழுத்தப்பட்டோமோ அந்த மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் அகிலம் நடுங்க எதிரிகள் தூரோகிள் சிதற, வெல்ல முடியாப் பலம் கொண்டு எழுவோம். கனடியத் தமிழர்கள் ஆகிய நாம் ஒன்றிணைந்து எம் மக்களுக்காகவும், மக்களின் படுகொலைக்காகவும் ஒரு எழுச்சி மிகுந்த நினைவு நாளை நினைவு கூர வேண்டும். எம்மக்களின் படுகொலையை இன அழிப்பை சர்வதேச சமூகத்துக்குக் கொண்டுபோக ஒரு அணியாக ஒரு இனமாக ஒரு நிகழ்வாக நாம் போராடுவோம். வருகின்ற வியாழக்கிழமை தமிழிசைக் கலாமன்றத்தில் (Tamil Isai Kalaamanram of Ontario, 3-1120 tapscott Rd, Scarborough) 7 மணிக்கு நடைபெறவுள்ள ஊடகவியலாளர் சந்திப்பிலும் பொது கூட்டதிலும் நாம் அனைவரும் சந்திப்போம்.

- தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம் -

தொடர்பு: 647-262-2016

முத்துக்குமாரின் மரண வாக்குமூலம்

உதாரணம் ரணில்- கருணா.

ஆனால், புலிகள் போர்நிறுத்தத்தைப் பயன்படுத்திக்கொண்டு செய்தது ஆயுதம் வாங்கியது மட்டுமல்ல, அது காலாகாலமாக நடப்பதுதானே- ஓர் அரசு நிர்வாகத்தையே உருவாக்கியுருக்கிறார்கள். சர்வதேசத்தின் கண்களில் இது தீவிரவாதமா? அப்பாவித்தமிழர்களைக் காப்பதற்காகத்தான் போரிடுவதாக பசப்புகிறது இந்தியா. ஆயுத தளபாடங்களும், உளவு விமானங்களும்தான் இலங்கை போகின்றனவே தவிர, இந்தியாவால் அனுப்பப்பட்ட ஒரு பாராசெட்டமால் மாத்திரையைக் காட்டச் சொல்லுங்கள் பார்க்கலாம். இந்த லட்சணத்தில், தமிழீழ மக்களுக்கான வசதிகளை இலங்கை அரசு செய்யுமாம். அதற்கு இந்தியா உதவுமாம். வேலிக்கு ஓணான் சாட்சி! இப்போது சர்வதேச செஞ்சுலுவைச் சங்கத்தின் ஆம்புலன்ஸ்களைத் தாக்கினார்களே, அவர்களும் விடுதலைப்புலிகளா? ப்ரான்சின் 17 மனித உரிமையாளர்களைக் கொலை செய்தார்களே, அவர்களும் விடுதலைப்புலிகளா? சீனாவின் டாங்கிகள், இந்தியாவின் உளவு விமானங்கள், பாகிஸ்தானின் ஆர்டிலரிகள் மட்டுமல்ல, இப்போது எம்மக்களைக் கொலைசெய்து வருவது சர்வதேச சமூகத்தின் மௌனமும்தான் என்பதை எப்போது உணர்வீர்கள்? நியாயத்தின்பால் பெருவிருப்பு கொண்ட ஒரு மக்கள் சமூகம் பூமியிலிருந்து முற்றாகத் துடைத்தழிக்கப்பட்ட பிறகா? அபாரிஜின்கள், மாயா, இன்கா வரிசையில் நாங்களும் சேர்க்கப்படுவது உங்கள் நோக்கமென்றால், எங்கள் பழங்கதைகள் ஒன்றின்படி ஒவ்வொருநாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வந்து உங்கள் முன்னால் தற்கொலை செய்து கொள்கிறோம். எங்கள் சகோதரிகளையும், குழந்தைகளையும் விட்டுவிட்டுச் சொல்லுங்கள். தாங்க முடியவில்லை. வர்களெல்லாம் மனமார சிரிப்பதை ஒருநாள் பார்ப்போம் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் போராடிக் கொண்டிருப்பதே. ஒரு பேச்சுக்கு ஒத்துக்கொள்வதென்றாலும்கூட, விடுதலைப்புலிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்றாலும் அப்படி ஒரு தண்டனையை வழங்கும் யோக்கியதை இந்தியாவுக்கோ, இலங்கைக்கோ கிடையாது.

காலம் கடந்து வழங்கப்படும் நீதி அநீதியைவிடக் கொடுமையானது.

- எனது பதினான்கு அம்சக் கோரிக்கைகள்-

1. இந்தியா உடனடியாக தமிழீழத்தின் பகுதிகளிலிருந்து தன் துருப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதோடு, மேற்கொண்டு செயற்கைக்கோள் உதவிகள், ராடார் போன்ற உதவிகளைச் செய்யக்கூடாதென்று சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்பட வேண்டும். இலங்கையோடு இந்தியா அரசு நடந்தும் முக்கியத்துவமற்ற பேச்சுப்பரிமாற்றங்கள்கூட சர்வதேச சமூகம் மூலமாகவே நடக்க வேண்டும். தமிழக மக்களிடமும், உலகெங்கும் பரந்து வாழும் தமிழீழத்தாரிடமும் இந்தியா பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும்.

2. ஐநா பொதுச்செயலாளரான பான் கி மூன், தொடர்ந்து தன் தாயகமான சீனாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருந்து, ஒருதலைப்பட்சமாக செயல்பட்டு வருவதால், ஈழம் தொடர்பான முடிவெடுக்கும் அதிகாரம் அவருக்கு வழங்கப்படக்கூடாது.

3. இலங்கை அரசு எந்தெந்த நாடுகளிடமெல்லாம் கோரப்பட்டு புலிகள்மீது தடை விதிக்கப்பட்டதோ அந்தந்த நாடுகளில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் என்ற குற்றத்திற்காக சிறையிலிருக்கும் அதன் உறுப்பினர்கள் எதுவித நிபந்தனையுமற்று உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

4. புலிகளின் உறுப்பினர்கள் மீதான பாஸ்போர்ட் தொடர்பான குற்றங்கள் மன்னிக்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

5. புலிகளோடு தொடர்புடையது என்னும் குற்றச்சாட்டின் பேரில் தடை செய்யப்பட தொழில் நிறுவனங்களின் உரிமம் மீண்டும் அளிக்கப்படுவதோடு, தக்க நட்ட ஈடும் வழங்கப்பட வேண்டும்.

6. ராஜீவ்காந்தி கொலை வழக்கு இண்டர்போலால் விசாரிக்கப்பட்டு, உண்மையான குற்றவாளிகள் இனம்காணப்பட வேண்டும்.

7. பிரணாப் முகர்ஜி, கோத்தபாய ராஜபக்க்ஷே, சந்திரிகா, உதயணகார, கேகலிய ரம்புக்வெல, பசில்ராஜப்க்ஷ மகிந்த, பொன்சேகா போன்றோர் நார்கோ அனிலிசிஸ் சோதனைக்குப்பட வேண்டும்.

8.அமைக்கப்படபோகிற தமிழீழத்தை அங்கீகரிக்கிற உரிமையை மட்டுகே சர்வதேசம் மேற்கொள்ளலாமே தவிர, அது யாரின் தலைமையில் அமையவேண்டும என்பதை தமிழீன மக்கள் தான் முடிவுசெய்வார்கள்

9. புலிகள் கை பலவீனமான நேரத்தில், மலையக மக்கள் மீது நடந்த வந்தாக்குதல், எதிர்காலத்தில் அப்பகுதிகளில் மீண்டும் ஒரு பாரிய இன அழிவு ஏற்படுத்தப்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதால், மலையக மக்கள் தமிழீழத்தோடு இணைய விரும்புகிறார்களா என்பதை வாக்கெடுப்பு மூலம் அறிந்து அதன்படி செயல்பட வேண்டும் இந்த விசயத்தில் மலையக மக்களின் முடிவே இறுதியானது.

10. சென்னையில், குடிபோதையில் அப்பாவித் தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தாவின் தண்டணைக்காலம் பூர்த்தியாகும் காலத்திற்கும் இலங்கைக்குத் தப்பிச்சென்று விட்டதால், அவர் கைது செய்யப்பட்டு, தமிழக போலிசார் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

11. பத்திரிகையாளரான லசந்தவின் கொலைக்குக் காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்.

12. தமிழ்நாட்டிற்கு தஞ்சம் புகுந்திருக்கும் சிங்கள பத்திரிகையாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

13.தமிழ்நாட்டிற்கு அகதிகளோடு அகதியாக வந்த சிங்களத்தம்பதியர் மீதான பாஸ்போர்ட் குற்றச்சாட்டு நீக்கப்பட்டு, அவர்களும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

14. சுட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கான வாழ்வாதரங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

என்றும் அன்புடன்,

அநீதிகளுக்கெதிரான உங்கள் சகோதரன்,

கு.முத்துக்குமார், 67/191, திருவள்ளுவர் தெருஇ மக்காரம் தோட்டம்இ கொளத்தூர், சென்னை-99,9380927441

அருமைத் தமிழ் மக்களே, அநீதிகளுக்கெதிரான போராட்டத்தில் நம் சகோதர்களும், பிள்ளைகளும் அறிவாயுதம் ஏந்தியிருக்கிறார்கள். நான் உயிராயுதம் ஏந்தியிருக்கிறேன். நீங்கள் நகலாயுதம் ஏந்துங்கள். ஆம், உங்கள் கையில் கிடைத்திருக்கும் இந்தத் துண்டறிக்கையை நகலெடுத்து, உங்கள் நண்பர்கள், உறவினர்கள், மாணவர்கள் வசம் கொடுத்து, போராட்டத்திற்கான ஆதரவைப் பெருகப் பண்ணுங்கள் நன்றி.

திகழ்வுகளின் அரங்கமுரசு

தமிழ் மரபுத் திங்கள் - பிரம்ரன் நகரசபை
Brampton City Hall
2 Wellington St W, Brampton ON
L6Y 4R2
Jan 24, Thur 6:30 PM

★ ★ ★

தமிழ் மரபுத் திங்கள் கொண்டாட்டம் - Stouffville Multicultural Association
Stouffville District Secondary School
801 Hoover Park Dr, Whitchurch-Stouffville, ON L4A 0A4
Jan 25, Fri 6:30 PM

★ ★ ★

தமிழ் பாரம்பரிய மாத கலக்கல் - கனடிய தமிழ் வல்லுநர் சங்கம்
Cedar Brae Golf Club
55 Mac Frost Way, Scarborough ON
M1X 1N6
Jan 25, Fri 6:30 PM

★ ★ ★

பருத்தித்துறை மக்கள் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் கலை இரவும் - 2019
Rouge Park Community Center
120 Rouge Park Dr, Markham ON
Jan 26, Sat 6:00 PM

★ ★ ★

அளவெட்டி அருணோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா இராப் போசன விருந்து
J & J Swaget Convention Centre
415 Hood Road, Markham
Jan 26, Sat 6:00 PM

★ ★ ★

கனடா தமிழ்க் கலைக் கல்லூரி நடாத்தும் - தமிழியல் மாநாடு 2019
Markham Convention Centre
2901 Markham Rd, Scarborough ON
M1X 0B6
Jan 26 & 27 Sat & Sun 9:00 AM

★ ★ ★

கனடிய தமிழர் தேசிய அவையின் மாபெரும் நிகழ்வு 2019
Markham Convention Centre
2901 Markham Rd, Scarborough ON
M1X 0B6
Jan 27, Sun 5:00 PM

★ ★ ★

தமிழ் மரபுத்திங்கள் பொங்கல் புத்தாண்டு விழா 2019 - பிரம்ரன் தமிழ் ஒன்றியம்
Chinguacousy Secondary School
1370 Williams Pkwy, Brampton ON
L6S 1V3
Jan 27, Sun 4:30 PM

★ ★ ★

நீர்வேலி நலன்புரிச் சங்கம் வழங்கும் "வாழையடி வாழை" 20வது வருடாந்த இராப்போசன நிகழ்வும் கலை விழாவும்
JC's Banquet Hall
1686 Ellesmere Rd, Scarborough ON
M1H 2V5
Feb 02, Sat 5:00 PM

★ ★ ★

நினைவுகள் இரவு - 2019
Chinese Cultural Centre
5183 Sheppard Ave, Scarborough ON
M1B 5Z5
Feb 09, Sat 5:00 PM

★ ★ ★

2019 ஆண்டின் விருது விழாவும் இராப்போசன விருந்தும் - கனடிய தமிழ் இளைஞர் கூட்டணி
Scarborough Covention Centre
20 Torham Place, Scarborough ON
M1X 0B3
Feb 10, Sun 6:00 PM

★ ★ ★

தையிட்டி மக்கள் ஒன்றிய குளிர்கால ஒன்றுகூடல்
Malvern Family Resource Centre
90 Littles Rd, Scarborough ON M1B 5E2
Feb 17, Sun 5:00 PM

இணுவில் திருவூர் ஒன்றியம்- கனடா அறிவித்தல்

வரவேற்வுபசாரமும் கௌரவிப்பும்

கனடாவிற்கு வருகை தரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் அவர்களை வரவேற்றுக் கனடா வாழ் இணுவில் மக்களின் சார்பில் நாம் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

காலம் 27 - 01-2019 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் - காலை 10.00 மணி முதல் மாலை 1.00 மணி வரை

இடம் - சபரிமலை ஐயப்பன் ஆலயம் (கீழ்த் தள மண்டபம்)
2721 Markham Rd Scarborough, ON M1X 1L5 (At Nashdene Ave) (Suncity Plaza)

கனடா வாழ் இணுவில் மக்கள் அனைவரையும் இந்நிகழ்வுக்கு வருமாறு அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு:

416- 286-4780 416 829-8920 (சோ.ரவிமோகன்)

416- 430- 0422 (மு.கிருபாகரன்)

647-885-7407 (சோ.சிவநாயகம்)

கனடிய அனலைதீவு ஐயனார் ஆலய அங்கத்தவர்களிற்கான பொதுக்கூட்ட அறிவிப்பு

கனடிய அனலைதீவு ஐயனார் ஆலய அங்கத்தவர்களிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ம் திகதி நடைபெற தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் இக்கூட்டத்திற்கு தவறாது வருகை தந்து தங்கள் பங்களிப்பினை வழங்குமாறு ஆலய அறங்காவலர் சபை வேண்டிக்கொள்கிறது.


திகதி: 10th February 2019 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: 2 PM
இடம்: ஆலய மண்டபம்
விடயம்: கணக்கு அறிக்கை சமர்ப்பித்தல், புதிய நிர்வாக சபை தெரிவு

ஆலய அங்கத்தவர்கள் கவனத்திற்கு:

புதிய நிர்வாக சபையில் இணைந்து தொண்டாற்ற ஆலய வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட தகுதிவாய்ந்த அங்கத்தவர்களை பரிந்துரை செய்யலாம். அதற்கான படிவம் (nomination form) தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுள்ளது. மேற்படி பரிந்துரை படிவத்தை பெற விரும்பினால் ஆலய அலுவகத்துடன் தொலைபேசிய ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். பெப்ரவரி மாதம் 7ம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் பரிந்துரைப் படிவங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆலய தொலைபேசி இல: 416 679 9899
மின்னஞ்சல்: secretary@iyanar.org
கனடிய அனலைதீவு ஐயனார் ஆலயம் / Analaitivu Iyanar Temple of Canada
22 Goodmark Place, Unit #13, Etobicoke, ON M9W 6R2

கனடிய தமிழர் பேரவையின் வருடாந்த பொங்கல் நிகழ்வு



கனடிய தமிழர் பேரவை தனது 12 வது பொங்கல் விழாவை வழமை போல் கடந்த ஜனவரி 19, 2019 அன்று, மார்க்கம் நகரிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் கொண்டாடியது. தமிழரது கலை , கலாச்சாரங்களைப் பறைசாற்றுவதோடு, தமிழர் தெருவிழா உட்பட, கடந்த வருடம் பேரவை மேற்கொண்ட செயற்திட்டங்களையும் எடுத்துக்கூறிய இந்த விழாவில் மிகக்கடுமையான காலநிலையையும் பொருட்படுத்தாது 800 க்கும் மேலான மக்கள் பங்குபற்றியிருந்தது பெருமைக்குரிய விடயம்..

இராப் போசனத்துடன் கூடிய இவ்விழாவில் ஒன்ராறியோ மாகாண அமைச்சர் றொட் பிலிப்ஸ், பிரம்டன் நகரபிதா பற்றிக் பிறவுண், ஸ்ரோவில் நகரபிதா இயன் லோவாட், ரொறொண்டோ பிரதி நகரபிதா மைக்கல் தொம்சன், மார்க்கம் பிரதி நகரபிதா டொன் ஹமில்டன், மற்றும் பல பாராளுமன்ற, மாகாணசபை, மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட்ட பல அரசியல்வாதிகள், பொதுச் சேவையாளர்கள், காவல்துறையினர், ஊடகவியலாளர், வர்த்தக சமூகத்தினர், சமூகத் தலைவர்களும் பல்வேறுபட்ட ஆசிய சமூகங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

விழாவின் முக்கிய அம்சமாக, தமிழ் இசைக்கும், தமிழர்கள் தங்கள் இசைத் திறமைகளை உலக அரங்குகளில் மிளிரவைக்க சந்தர்ப்பம் வழங்கியமைக்குமாக இசையமைப்பாளர் டி.இமானுக்கு இவ்வருடத்துக்கான “மாற்றத்திற்கான தலைவர்கள்“ விருது வழங்கப்பட்டது. அதே வேளை, டி. இமான் அவர்கள் ரொறொண்டோ பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்காக “எங்கும் தமிழ், எதிலும் தமிழ்“ என்னும் தமிழ்க் கீதமொன்றை இலவசமாக உருவாக்கியதோடு, தன் கடுமையான வேலைப் பளுவையும் தள்ளிவைத்துவிட்டு இந்த விழாவிற்கு இந்தியாவிலிருந்து தன் செலவிலேயே வந்து கீத இறுவட்டை வெளியிட்டும் உதவியிருந்தார். அத்தோடு, ரொறொண்டோ பல்கலைக்கழகத்தின் ஸ்காபரோ வளாகத் தமிழ்க் கற்கையின் மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வரும் முனைவர் பிரெண்டா பெக் அவர்களுக்கு இவ் வருடத்திற்கான “மிகச் சிறந்த சேவைக்கான“ விருதும் வழங்கப்பட்டது. ரொறொண்டோ பல்கலைக்கழகத்தில் தமிழ் மூலப்படிவங்களைப் பிரதியிட்டுப் பாதுகாக்கும் பணிக்காக முனைவர் பெக் அவர்கள் தன் சொந்தப் பணத்திலிருந்து சுமார் நான்கு லட்சம் டாலர்களைத் தானம் செய்திருந்தார்.


கனடிய தமிழர் பேரவையின் தலைவர் மருத்துவர் வடிவேலு சாந்தகுமார் இவ்விழாவில் பேசும்போது, இந்த வருடத்தின் அதி முக்கிய நிகழ்வாக அமையப்போகும் முள்ளிவாய்க்கால் நினைவுகளின் 10வது ஆண்டு நிகழ்வுகளை கனடிய மற்றும் உலகத் தமிழர்கள் மனதில் நிறுத்தி எமது மக்கள் அமைதியானதும், நீதியுடனுமான நிறைவாழ்வை அனுபவித்தற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு எம்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பொறுப்பானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார்.

இந்நிகழ்வின் விசேட அம்சங்களாக ஜெனனி குமார் அவர்களது மாணவிகளின் நடனமும் ஐஸ்வர்யா பிரபாகர் அவர்களது கரகாட்டம், சிலம்பாட்டம், மற்றும் “தலைமைத்துவம், மாற்றங்களுக்கான நடுவ“ த்தைச் சேர்ந்த இளையோரின் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.


இப் பிரமாண்டமான நிகழ்வைத் சாத்தியமாக்கிய பெருமை பெரும் புரவலர்களையும், விளம்பரதாரர்களையும், நலன் விரும்பிகளையுமே சாரும். இவர்களோடு கூடவே இந்நிகழ்வு வெற்றிகரமாக நிறைவேறப் பல தொண்டர்களினதும், குறிப்பாகப் பல இளையதலைமுறையினரின் ஆர்வமான பங்களிப்பையும் அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. கனடிய பெரும் சமூகத்துக்கும், வருங்காலத் தமிழ்ச் சமூகத்துக்கும் இப்படியான விழாக்கள் தமிழர் கலாச்சாரம், வரலாறு பற்றிய பெரும் கதை சொல்லிகளாக அமையும் என எதிர்பார்க்கலாம்.


பட்டு சேலைகளின் சாம்ராஜ்யம்
25 வருடம் அனுபவம், திறமை
Nallur Kumaran
நல்லூர் குமரன் SAREES
MORE THAN 25 MILLION DOLLAR SAREES SOLD
புதிய முகவரியில்
01-01-2019 முதல்
83 DYNAMIC DRIVE UNIT 7
MCNICOLL AVE & DYNAMIC DRIVE
SCARBOROUGH
ON. M1V 4C8
SILK SAREES PRICE START FROM $50.00
2X2 BLOUSE $2.00 SIZE 32
2X2 BLOUSE $5.00 SIZE 34
SALWAR, NIGHTYS
ALL SAREES
SPECIAL DISCOUNT
SALE
Passmore Ave.
Nallur Kumaran
Markham Road
McNicoll Ave.
Nashdene Rd.
Aiyappan Temple
KANCHIPURAM SILK SAREES
SOFT SILK SAREES, COTTON SAREES, DESIGNER SAREES
TEL: 416-285-6797 CELL: 416 414 6738


ROGERS™
விடுமுறை கால
விசேட சலுகைகளைப்
பெற்றுக்கொள்ள அழையுங்கள்
416.908.6845
SAVE UP TO $1350
NETFLIX
UNLIMITED
INTERNET
TV - HOME PHONE
SMART
HOME
MONITORING
தமிழில் உரையாட அழையுங்கள்
சுந்தர் சின்னத்தம்பி
Rogers Local Area Advisor
416.908.6845
puvanendran.sinnatha@rci.rogers.com


GTA
CHIROPRACTIC CENTRE
We are specialized in.
• Motor Vehicle Accidents
• Slip & Fall
• WSIB
• Extended Health Care
• Sports Injuries
• Physiotherapy
• Chiropractic
• Orthotics Shoes
• Massage Therapy
• Acupuncture
Health is Wealth
Pon. Pathman (Pat) President
Tel: 416-321-0482 Cell: 416-528-5318
Fax: 416-321-0486
GTA Square Mall 5215 Finch Ave, E#206
Scarborough, ON, M1S 0C2
www.gtachiro.ca E-mail: gtaphysio@gmail.com

WEXFORD
WELLNESS CARE INC.



SERVICES

- Massage Therapy
- Physiotherapy
- Orthopaedic
- Acupuncture
- Chiropractic
- Orthotics

We treat all car accident injuries!

We deal directly with Insurance Companies
Extended Health Care, Corporate Insurance, ODSP
WSIB, Motor Vehicle Accident (MVA)

Tel : 647-349-5120 Fax : 647-349-5121

Unit 301-240 Alton Towers Cir,
Scarborough ON M1V 3Z3

K.T JATHU
Blinds & Shutters



TORONTO
647-979-9363

MONTREAL
514-991-9137

THANA INSURANCE INC

THANA INSURANCE INC

கொடிய நோய்க்குரிய காப்புறுதி

CRITICAL ILLNESS INSURANCE -100% MONEY BACK

AGE		25		30		35		40		45		50	
		M	F	M	F	M	F	M	F	M	F	M	F
50 K	T75	60	59	68	68	76	73	95	88	137	129	221	195
100 K	T75	101	101	122	118	137	127	165	153	240	226	403	344

CRITICAL ILLNESS INSURANCE (T20) 0% MONEY BACK

AGE	50K		100K		200K	
	M	F	M	F	M	F
30	21	22	33	35	59	63
31	22	23	35	37	63	67
32	23	25	27	39	67	71
33	24	26	39	41	72	75
34	25	27	42	43	76	80
35	26	28	44	46	81	85
36	28	30	47	48	87	90
37	30	31	50	51	94	96
38	32	32	54	54	101	102
39	34	34	58	57	108	109
40	36	35	62	61	117	116
41	38	38	67	65	127	124
42	41	40	72	70	137	133
43	44	42	78	74	149	142
44	47	45	85	80	162	153
45	51	48	92	85	176	164
46	55	51	100	91	192	175
47	59	54	109	97	210	187
48	64	57	119	104	229	200
49	69	61	128	111	250	214
50	75	65	141	119	273	229

கொடிய நோயை விட அதற்கு ஏற்படும் செலவுகளிற்கு அஞ்சுகிறீர்களா?

எதிர்பாராமல் ஏற்படும் நோய்களிற்கு உங்கள் எதிர்கால சேமிப்பை கரைக்கும் முன்னர் உங்களின் நம்பிக்கையான ஆதாரம்



RBC Insurance · Manulife · INDUSTRIAL ALLIANCE · LaCapitale Financial Group · Assumption Life · BMO Insurance · Sun Life Financial

Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416.728.5772
office : 416.519.3896
80 Nashdene Road #D218
Toronto ON M1V 5E4


PTR DOORS & WINDOWS
OVER 14 YEARS EXPERIENCE
RESIDENTAL & COMMERCIAL
PTR
* Custom Doors & Windows
* Front Door & Patio Door
* Replacement (Doors & Windows)
* Separate Entrance Door for Bastment
* Replace Caulking
* Painting
* Pot Lights Installation
TRIBLE GLASS WINDOWS
GET UPTO $5000 IN REBATES
We Fixed Broken Glass Windows & Doors
CALL FOR FREE ESTIMATE
Ravi: 416-825-9482
Kanna: 647-297-7815
Email: ptrrenovation@gmail.com


The new 2019 Civic is here
Bring home a
HONDA
THE NEW 2019 CivicLX
FROM
$66/3.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC
$0 SECURITY DEPOSIT
Honda Sensing Technologies standard on most Civic models.
MODEL FC2F5KEX
2018 CR-VLX AWD
FROM
$78/2.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$2,290 DOWN PAYMENT/OAC
$0 SECURITY DEPOSIT
MODEL RW2H2JES
2018 AccordLX
FROM
$76/1.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC
$0 SECURITY DEPOSIT
MODEL CV1E1JE
IT ISN'T TOO LATE FOR A GREAT DEAL ON A 2018
HondaOntario.com
Ontario Honda Dealers
LEASE PAYMENTS INCLUDE FREIGHT AND PDI. EXCLUDES LICENCE AND HST. AVAILABILITY OF SPECIFIC MODELS WILL VARY. COLOUR AVAILABILITY MAY VARY. DEALER ORDER/TRADE (2018 HONDA MODELS ONLY) MAY BE NECESSARY.
HONDA
Rajah Tharmalingam
Sales & Leasing Consultant
Cell:647-833-4998
Formula Honda
Where You're Treated like Family.
Shan Sarvananthan
Sales & Leasing Consultant
Cell: 416-720-1184
தமிழில்
English லும்
உரையாடி
சேவைகளைப்
பெற்றுக்கொள்ள
என்னை
அழையுங்கள்

யதீந்திரா

ஒரு உள்நாட்டு யுத்தத்திற்கு பின்னரான அரசியல் தீர்வு முயற்சி ஏன் இந்தளவு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கிறது?

புதிய அரசியல் யாப்பு ஒன்று வரவுள்ளது என்னும் அடிப்படையில் பல்வேறு விவாதங்கள் இடம்பெற்றன. ஆனால் இன்றைய தென்னிலங்கை அரசியல் நிலைமைகள் ஒரு விடயத்தை தெளிவாக நிருபித்துவிட்டது. அதாவது, அவ்வாறானதொரு அரசியல் யாப்பு ஒன்று வரப்போவதில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் உத்தேச அரசியல் யாப்பு தொடர்பான நிபுணர் குழு அறிக்கையொன்று வெளியாகியிருக்கிறது. இதனை



தாம் நிராகரிப்பதாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான டெலோ உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது. கூட்டமைப்பின் பிறிதொரு பங்காளிக் கட்சியியான புளொட்டின் தலைவர் சித்தார்த்தனோ, பல்வேறு சந்தர்ப்பங்களில், புதிய அரசியல் யாப்பு ஒன்று வரப்போவதில்லை என்று கூறியிருக்கிறார். அவ்வாறாயின் கூட்டமைப்பு அரசியல் தீர்வு தொடர்பில் பேசிவருவது, ஒரு வகையில் ஏமாற்று நாடாகம்தானா? இப்படியொரு கேள்வி எழலாம். ஆனால் இந்தப் பத்தி கூட்டமைப்பு தொடர்பில் எந்தவொரு குற்றச்சாட்டையும் முன்வைக்கவில்லை. வழமைக்கு மாறாக சற்று மாறுபட்ட வகையில் அரசியல் தீர்வு விடயத்தை ஆராய முற்படுகிறது.

இலங்கைத் தீவில் இடம்பெற்றது ஒரு உள்நாட்டு யுத்தம். அது முடிவுற்று ஏறக்குறைய பத்து வருடங்கள் ஆகப்போகின்றது. இது ஒரு சாதாரணமான காலப்பகுதி அல்ல. மனித வாழ்வை பொருத்தவரையில் ஒரு தசாப்தகாலம். இந்தக் காலத்தில் தமிழ் மக்களை முன்னிறுத்தி பல்வேறு விடயங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறான விடயங்கள் உள்நாட்டுக்குள்ளும் வெளிநாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் பெரியளவில் எந்தவொரு முன்னேற்றங்களையும் எவராலும் காண்பிக்க முடியவில்லை. இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாக

13வது திருத்தச்சட்டம்தான் சட்டரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தீர்வாக இருக்கிறது. அதனை தீர்வாக ஏற்றுக்கொள்ளாது விட்டாலும் கூட. ஏன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னரான எந்தவொரு மேற்குலக முயற்சியும் இலங்கைத் தீவில் வெற்றிபெறவில்லை. இதில் எங்காவது நாம் விளங்கிக்கொள்ளாத ஒரு பக்கம் உண்டா? தெற்காசிய பிராந்தியத்தின் சக்தியாக தன்னை நிறுவ முயலும் இந்தியாவின் முழுமையான ஈடுபாடு இல்லாமல் எந்தவொரு மாற்றமும் இலங்கைத் தீவில் ஏற்படாதா?

கூறப்படும் பல்வேறு விடயங்கள் தொடர்பில், பல்வேறு விவாதங்கள் இடம்பெற்றிருக்கின்றன. 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து இந்த விவாதங்கள் ஒரு முடிவுக்கு வந்தன. இதன் பின்னர் கடந்த மூன்று வருடங்களாக புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவரும் முயற்சியில் கூட்டமைப்பும் அரசாங்கமும் இணைந்து பயணித்திருந்தது. கடந்த

ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவிநீக்கம் செய்ததன் மூலம், கூட்டமைப்பு அதுவரை மேற்கொண்டு வந்த பயணமும் முடிவுக்குவந்தது. இதன் பின்னர் இடம்பெற்ற மைத்திரி தின்ற உப்பு - கடிநாயை கட்டிப்போடுதல் என்றவாறான விவாதங்களை எல்லாம் ஒரு பக்கமாக தூக்கிவீசிவிடுங்கள். அவையெல்லாம் தேர்தல் அரசியலுக்கான மூலதனங்கள். ஆனால் கேள்வி - பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட புதிய அரசியல் யாப்பிற்கான முயற்சிகள் அனைத்தும் ஏன் விழலுக்கு இறைத்த நீராகியது?

2015 செப்டம்பர் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 30 வது கூட்டத் தொடரின் போது, அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்களசமரவீர, முதல் முதலாக புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசியிருந்தார். இதன் பின்னர்தான் புதிய அரசியல் யாப்பு ஒன்று தொடர்பில் கூட்டமைப்பும் பேச ஆரம்பித்திருந்தது. ஆனால்





இங்கு கவனிக்க வேண்டிய விடயம் ஒன்றுண்டு. அதாவது, புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவருவது தொடர்பில் மங்கள பேசியிருந்தாலும் கூட, அதில் தமிழ் மக்களுக்கு எவ்வாறானதொரு அரசியல் ஏற்பாட்டை வழங்கப் போகின்றோம் என்பது தொடர்பில் எவ்வித கருத்தையும் அரசாங்கம் கூறியிருக்கவில்லை. இங்கு

பிறிதொரு விடயத்தையும் ஆழமாக கவனிக்க வேண்டும். அரசாங்கம் அமுல்படுத்துவதாக இணங்கிய மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையிலும் கூட, அரசியல் தீர்வு தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதில் அரசியல் தீர்வு தொடர்பில் ஏதாவது இருக்கிறதா என்று தேடினால்

13வது திருத்தச்சட்டம் தொடர்பில் மட்டும்தான் பேசப்பட்டிருக்கிறது. அவ்வாறாயின் அரசாங்கத்திற்கு புதிய அரசியல் யாப்பு சமஸ்டி பண்புகளை கொண்டிருக்க வேண்டும், அதில் தமிழர் தாயக் பகுதியான வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்றவாறான எந்தவொரு சர்வதேச கடப்பாடும் இல்லை.

24ஆம் பக்கம் பார்க்க...

ஒரு உள்நாட்டு யுத்தத்திற்கு பின்னரான

அரசியல் தீர்வு முயற்சி ஏன் இந்தளவு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கிறது?

அவ்வாறிருக்கின்ற போது, அரசாங்கம் புதிய அரசியல் யாப்பில் சமஸ்டி தீர்வை உள்ளடக்கவில்லை என்று கூட்டமைப்பினர் குற்றம்சாட்டுவதில் ஏதாவது பொருள் இருக்க முடியுமா?

இந்த விடயங்களை தொகுத்து நோக்கினால் கடந்த மூன்று வருடங்களாக இல்லாத ஒன்று, இருப்பதான நம்பிக்கையுடன்தான் தமிழரின் அரசியல் விவாதங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவ்வாறாயின் தமிழர்களுக்கான தீர்வுதான் என்ன? எவரிடம் பதிலுண்டு?

இந்த இடத்தில் எழும் கேள்வி - ஒரு உள்நாட்டு யுத்தம் மிகவும் மோசமான படுகொலைகளுடனும், மனித உரிமைகள் மீறல்களுடன் முடிவடைந்திருக்கின்றது. அந்த உள்நாட்டு யுத்தில் ஒரு தரப்பு மிகவும் மோசமாக அழிக்கப்பட்டிருக்கிறது. அந்த அழிவு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு ஆறாத காயமாக இருக்கிறது. எனவே காயத்தை ஆற்ற வேண்டும் என்றால், மீளவும் அவ்வாறானதொரு நிலைமை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுவிடாத வகையில் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கவசம் தேவை. அது நிச்சயமாக மீளவும் பறிக்கப்பட முடியாதவொரு அரசியல் தீர்வாகத்தான் இருக்க முடியும். ஆனால் அது சாத்தியப்படவில்லை. அதனை சாத்தியமாக்க வேண்டும் என்று மேற்குலகமும் (அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும்) அரசாங்கத்தின் மீது கடுமையான அழுத்தங்கள் எதனையும் பிரயோகிக்கவில்லை. ஆனால் தமிழர் தரப்புக்களோ சர்வதேசத்திடம் முறைவிடுவோம் - என்று கிளிப்பிள்ளைகள் போல் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் அதனை ஒரு பெரிய விடயமாக சர்வதேச சக்திகள் எடுக்கவில்லை. இதனை எவ்வாறு விளங்கிக் கொள்வது?

இலங்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். தமிழ் நாட்டை ஒரு மானிலமாக கொண்டிருக்கும் இந்தியாவால் அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது - என்னும் வாதத்தின் அடிப்படையில்தான் இலங்கையின் மீதான இந்தியத் தலையீடு நிகழ்ந்தது. அதன் விளைவாக வந்ததுதான் 13வது திருத்தச் சட்டம். அதனை ஒரு தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது என்னும் அடிப்படையில்தான் விடுதலைப் புலிகள் போராட்டத்தை தொடர்ந்தனர். இந்தியாவையும் பகைத்துக் கொண்டனர். இந்த சந்தர்ப்பத்திற்கு பின்னர் இந்தியா எட்ட நிற்பதாகவும் - மேற்கு கிட்ட நிற்பதாகவும்தான் தமிழரின் அரசியல் நம்பிக்கைகள் நகர்ந்தன. ஆனால் மேற்கின் தலையீட்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் ஏதோவொரு இடத்தில் தோல்வியைத்தான் தழுவியிருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட போது, சந்திரிக்கா குமாரதுங்க திடிரென்று மூன்று முக்கிய அமைச்சர்களை பதவி நீக்கி, சமாதான முன்னெடுப்புக்களில் முட்டுக்கட்டை போட்டார். இறுதியில் நோர்வேயின் முயற்சி படுதோல்வியில் முடிந்தது. அதற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட மேற்குலகின் பிரதான தலையீடு என்றால் அது தற்போது முன்னெடுக்கப்பட்டுவந்த அரசியல் யாப்பு முயற்சிதான். அந்த முயற்சிகள் முன்னகரும் என்னும் நம்பிக்கை நிலவிய சூழலில்தான், மைத்திரிபால சிறிசேன திடிரென்று ரணிலை பதவி நீக்கி, நல்லாட்சி அரசாங்கத்தின் ஆயுளை முடித்தார். புதிய அரசியல் யாப்பின் கதையும் முடிவுக்கு வந்தது. இந்த பின்புலத்தில் நோக்கினால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னர், இலங்கைத் தீவில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தீர்விற்கான அனைத்து முயற்சிகளும் ஏதோவோரு வகையில் தோல்வியில்தான் முடிந்திருக்கிறது. ஏன்? இந்திய - இலங்கை ஒப்பந்தம் தோல்வியில் முடிந்ததாக சொல்லப்பட்டாலும், அதன் விளைவாக வந்த 13வது திருத்தச்சட்டம்தான் சட்டரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தீர்வாக இருக்கிறது. அதனை தீர்வாக ஏற்றுக்கொள்ளாது விட்டாலும் கூட. ஏன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னரான எந்தவொரு மேற்குலக முயற்சியும் இலங்கைத் தீவில் வெற்றிபெறவில்லை. இதில் எங்காவது நாம் விளங்கிக்கொள்ளாத ஒரு பக்கம் உண்டா? தெற்காசிய பிராந்தியத்தின் சக்தியாக தன்னை நிறுவ முயலும் இந்தியாவின் முழுமையான ஈடுபாடு இல்லாமல் எந்தவொ்ரு மாற்றமும் இலங்கைத் தீவில் ஏற்படாதா? ஏனெனில் சமாதான ஒப்பந்தம் தொடங்கி 2009இற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு அரசியல் இணக்கப்பாட்டு முயற்சிகளிலும் இந்தியாவின் ரேநடியான தலையீடு இருந்திருக்கவில்லை. இந்த நிலைமைதான் இனியும் தொடரப் போகிறது என்றால், தீர்வு தொடர்பான முயற்சிகள் என்பது ஒரு வீண் வேலையா?



இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் புதிய பிரேரணை கொண்டுவரப்படும்

ஐரோப்பிய ஒன்றிய நாடு நடவடிக்கை எடுக்கலாம்: ஜெஹான்

இம்முறை ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் மற்றுமொரு புதிய பிரேரணை கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். ஐரோப்பிய ஒன்றிய நாடு இந்த புதிய பிரேரணையை கொண்டுவரலாம் என்று தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

ஆனால் ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படவேண்டியது அவசியமாகும். இலங்கைக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவது தொடர்பில் சர்வதேச அழுத்தம் இருப்பதற்கு இது ஏதுவாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 22 ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய் நாடுகள் மனித உரிமை பேரவையின் 40 ஆவது கூட்டத் .தொடரில் என்ன நடக்கும் என்பது குறித்து விபரிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார். கடந்த காலங்களில் ஜெஹான் பெரெரா ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கையின் சார்பில் கலந்துகொண்டிருந்தார்.

அவர் இது தொடர்பில் கேசரிக்கு மேலும் குறிப்பிடுகையில் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 40 ஆவது கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பில் மற்றுமொரு புதிய பிரேரணை கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இந்த புதிய பிரேரணையை கொண்டுவரலாம்.

தற்போது அமெரிக்கா மனித உரிமை பேரவையில் இல்லாததால் ஐரோப்பிய ஒன்றிய நாடு ஒன்று இந்தப் பிரேரணையை கொண்டுவரலாம். அதற்கான எந்த அறிவிப்பும் இதுவரை வரவில்லை. ஆனால் தற்போது காணப்படுகின்ற நிலைமையை நோக்குகையில் நிச்சயம் இலங்கை தொடர்பில் மற்றுமொரு பிரேரணை வரும் என்பதனை எதிர்வுகூறலாம்.


இதேவேளை ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படவேண்டியது அவசியமாகும். இந்த நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன். அதாவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவது தொடர்பில் சர்வதேச அழுத்தம் ஒன்று இருப்பதற்கு இது ஏதுவாக அமையும்.

பதவியில் இருக்கின்ற அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்ற விரும்பவில்லை என்று கூற முடியாது. ஆனால் அதற்கு எதிர்ப்புக்களும் உள்ளன. எனவே இந்த விடயங்கள் இடம்பெறவேண்டுமானால் சர்வதேச மட்டத்தில் ஒருவித அழுத்தம் இலங்கை மீது இருப்பது அவசியமாகும்.

அவ்வாறு அழுத்தம் நீடிக்கும் பட்சத்திலேயே அரசாங்கமும் நீதிப் பொறிமுறையை முன்னெடுப்பதில் ஆர்வம் செலுத்தும். அதற்கு புதிய ஜெனிவா பிரேரணை ஒன்று வரவேண்டியது அவசியமானது என்றே நான் கருதுகின்றேன்.

கடந்த 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரேரணை கடந்த 2017 ஆம் ஆண்டு மீண்டும் கால அவகாசத்துக்கு உட்பட்டது. தற்போது அதற்கான காலமும் நிறைவடைகின்றது. எனவே இம்முறை 40 ஆவது கூட்டத் தொடரில் புதிய பிரேரணை ஒன்று வரலாம். புதிய பிரேரணை ஒன்று வ.ரவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி வந்த போது காணாமல் போனோரின் உறவுகள் கவனயீர்ப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முல்லைத்தீவு வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களுக்கு நீதி கோரி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முல்லைத்தீவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி தேசிய பாடசாலையில் தேசிய போதைப்பொருள் எதிர்ப்பு வார ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் திங்கட்கிழமை நடைபெற்றது இந்த நிகழ்வுக்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு தமது எதிர்ப்பினை வெளியிடும் முகமாகவும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரியும் அவர்களுக்கான பதிலை கூறுமாறு கோரியும் இந்த ஆர்ப்பாட்டத்தை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மேற்கொண்டிருந்தனர்.

பொலிஸ் மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் இந்த ஆர்ப்பாட்டம் முல்லைத்தீவு புளியங்குளம் வீதியில் காலை ஒன்பது முப்பது மணி அளவில் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டவர்களை இராணுவப் புலனாய்வாளர்களும் பொலிசாரும் புகைப்படங்களை எடுத்ததுடன் ஜனாதிபதி வருகை தந்த போது அவரவருக்கு அண்மையாக செல்லவிடாது போலீசார் தடுத்து நிறுத்தினர்.

இருந்தபோதும் ஜனாதிபதி வருகை தந்த போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வீதியில் விழுந்து புரண்டு கதறி அழுது தமது உறவுகளுக்கு நீதி வேண்டும் எனக்கோரி பதாதைகளை தாங்கி தமது ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர்.

எனினும் ஜனாதிபதி இவர்களை கண்டும் காணாதவர் போல் சென்று சென்றதாகவும் தமது தமது கோரிக்கையை ஜனாதிபதி கேட்கவில்லை என்றும் தம்மை திரும்பிக் கூட பார்க்கவில்லை என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கதறி அழுதனர்.

இந்த நிலையில் 685 நாட்களாக போராட்டத்தை நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பந்தல் அமைந்திருக்கும் பகுதிக்கு சென்ற சிலர் நீங்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள வேண்டாம் அவ்வாறு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டால் அனைவரையும் கைது செய்வோம் எனவும் தம்மை அச்சுறுத்தியதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க தலைவி ஈஸ்வரி தெரிவித்தார்.

புதிய யாப்பை ஏற்கமுடியாது ரொலோ அதிரடி அறிவிப்பு

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பிலான நிபுணர் குழுவின் அறிக்கையை நிராகரிப்பதாக,' ரெலோ எனப்படும் தமிழீழ விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசியல் பின்னணியில் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பிலான நிபுணர் குழுவின் அறிக்கையைக் கவனமாகவும் நிதானமாகவும் ஆராய்ந்து பார்க்கையில், அதனை நிராகரிப்பதனைத் தவிர வேறு தெரிவு எதுவும் தமக்கு இல்லை என ரெலோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபுணர் குழுவின் அறிக்கையின்படி, ஒற்றையாட்சி முறை தொடர்ந்து நீடிப்பதற்கு மிகவும் சாதுர்யமாக பிரேரிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகாரப் பங்கீட்டு விடயத்தில் அதனை விஸ்தரித்து வலுப்படுத்தி முழுமைப்படுத்துவதற்குப் பதிலாக அரைகுறையான அதிகாரங்களை மாத்திரமே மாகாணசபைகளுக்கு வழங்கியிருக்கும் 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் ஆக்கபூர்வமான எந்தவொரு முன்னேற்றகரமான யோசனையும் இதில் காணப்படவில்லை எனவும் ரெலோ வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளைத் தொடர்ந்து நிராகரித்து, பௌத்த பெரும்பான்மையினரில் அரசியல் மேலாதிக்கத்தை வலுப்படுத்தும் வகையில் இந்தத் தீர்வுத்திட்ட அறிக்கை அமைந்துள்ளது என்பதை திட்டவட்டமாக தெரிவிக்கத் தவறினால் அது தமிழ் மக்களுக்கு தாம் இழைக்கும் துரோகமாக அமையும் எனவும் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் செயலாளர் நாயகம் நா.ஸ்ரீகாந்தா ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஜித்தை நாம் அழைக்கவேயில்லை ரசிகர்களைக் கட்டுப்பத்த முடியுமா?

அஜத்தின் அறிக்கை குறித்து தமிழிசையின் விளக்கம் இது



நடிகர் அஜித்தை பாஜக அழைக்கவில்லை அஜித்தின் விளக்கமும் எனக்கான பதிலடி இல்லை என்று தமிழிசை சவுந்தரராஜன் விளக்கமளித்திருக்கிறார்.

அண்மையில் திருப்பூரில் நடந்த நிகழ்ச்சியில் பாஜகவில் அஜித் ரசிகர்கள் சிலர் இணைந்தார்கள் என்று செய்தி வந்தது. தொடர்ந்து, தமிழிசை சவுந்தர்ராஜன், அஜித்தையும், அஜித் ரசிகர்களையும் நேர்மையானவர்கள் என்று பாராட்டிப் பேசியிருந்தார். இதனால் அஜித்துக்கு பாஜக அழைப்பு என்று தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், அஜித் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில், "எனக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசியல் ஈடுபாட்டில் எந்த ஆர்வமும் இல்லை.. நான் சினிமாவில் தொழில் முறையாக வந்தவன். நான் அரசியல் செய்யவோ, மற்றவர்களுடன் மோதவோ இங்கு வரவில்லை. என் ரசிகர்களுக்கும் அதையேதான் நான் வலியுறுத்திகிறேன். அரசியல் சார்ந்த எந்த ஒரு வெளிப்பாட்டை நான் தெரிவிப்பதில்லை. என் ரசிகர்களும் அவ்வாறே இருக்க வேண்டும் என விரும்புகிறேன்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய தமிழிசை சவுந்தரராஜன், "நடிகர் அஜித்தை பாஜகவுக்கு அழைக்கவில்லை. திருப்பூரில் நடந்த நிகழ்ச்சியில் தங்களை அஜித் ரசிகர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்ட 2000-க்கும் மேற்பட்டவர்கள் பாஜகவில் இணைந்தனர். அஜித் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆனால் அவரது அறிக்கைக்கு பாஜக அழைப்புக்கு அஜித் பதிலடி என்ற கோணத்தில் அர்த்தம் சொல்லப்படுகிறது.

அஜித் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்திருக்கிறது வரவேற்கத்தக்கது. ஆனால், அவர் அவருடைய ரசிகர்களைக் கட்டுப்படுத்த முடியுமா என்பது தெரியவில்லை? அஜித்தின் அறிக்கை பிரமாதமாக வடிவமைத்திருக்கிறார். மற்ற நடிகர்கள் மாதிரி இல்லாமல் அவர் அவரது நிலையை தெளிவுபடுத்தியிருக்கிறார். அஜித் அறிக்கை தமிழிசைக்கு பதிலடி என்று சொல்லப்படுகிறது. அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. இது எனக்கான பதிலடியெல்லாம் இல்லை. நாங்கள் அஜித்தை அழைக்கவும் இல்லை.

நான் ஒரு மருத்துவமனையில் பணியாற்றிக் கொண்டிருந்த போது ஒரு குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்ய அஜித் உதவி செய்தார். அப்படிப்பட்ட நல்ல மனிதர் அவர். அதனால், அவரையும் அவரது ரசிகர்களையும் நான் பாராட்டினேன்." என்று கூறினார்." என்று கூறினார்.

அரசியலுக்கு வந்தார் பிரியங்கா காந்தி கட்சி முக்கிய பொறுபையும் ஏற்றார்

சோனியா காந்தியின் மகள் பிரியங்கா வத்ரா தீவிர அரசியலில் இறங்கியுள்ளார். காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளராக பிரியங்கா வத்ரா நியமிக்கப்பட்டு அவருக்கு உத்தரப்பிரதேச கிழக்கு பிராந்தியம் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை முழுநேர அரசியலில் ஈடுபடாமல் அவ்வப்போது ரேபரேலி, அமேதி தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் மட்டும் பிரியங்கா வத்ரா ஈடுபட்டு வந்தார். இந்நிலையில், முதல் முறையாக காங்கிரஸ் கட்சியில் அதிகாரபூர்வ பதவி பிரியங்கா வத்ராவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

47 வயதாகும் பிரியங்கா வத்ரா தீவிர அரசியலுக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கடந்த 1999-ம் ஆண்டு தொழிலதிபர் ராபர்ட் வத்ராவை திருமணம் செய்தபின் அரசியலில் ஈடுபடுவதைத் தவிர்த்து வந்தார்.

தனது தாயார் சோனியா காந்தி போட்டியிடும் உத்தரப்பிரதேசம் ரேபரேலி மக்களவைத் தொகுதி, ராகுல் காந்தி போட்டியிடும் அமேதி தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் மட்டும் பிரியங்கா காந்தி ஈடுபட்டு வந்தார். மற்றவகையில் தீவிரமான அரசியலில் அவர் பங்கேற்காமல் தவிர்த்து வந்தார்.

இந்நிலையில், மத்தியில் ஆளும் பாஜக அரசை அகற்றும் காங்கிரஸ் கட்சி மிகப்பெரிய கூட்டணியை உருவாக்கி வருகிறது, பாஜகவை எதிர்த்து தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகிறது.

பாஜகவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்ட உத்தரப்பிரதேசத்தில் பகுஜன் சமாஜ், சமாஜ்வாதி ஆகிய கட்சிகளுடன் இணைந்து தேர்தலை சந்திக்கலாம் என்று காங்கிரஸ் கட்சி திட்டமிட்டு இருந்தது. ஆனால், 80 தொகுதிகளைக் கொண்ட உ.பி.யில் காங்கிரஸ் கட்சிக்கு மக்களின் ஆதரவு இல்லை என்பதை மறைமுகமாக உணர்த்திய சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் கட்சிகள் தனியாகக் கூட்டணி அமைத்து அறிவித்தன.

காங்கிரஸ் கட்சியை கழற்றிவிட்ட சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி ஆகியோர், ரேபரேலி, அமேதி தொகுதியில் மட்டும் தங்கள் கட்சியின் வேட்பாளர்களை நிறுத்தமாட்டோம் என்று அறிவித்தனர். காங்கிரஸ் கட்சியுடன் மாநிலத்தில் கூட்டணிக்கு இடமில்லை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர்.


இதனால் உத்தரப்பிரதேசத்தில் மக்களவைத் தேர்தலை தனித்துச் சந்திக்கும் தர்மசங்கடமான நிலை காங்கிரஸ் கட்சிக்கு உருவானது. 80 தொகுதிகளிலும் போட்டியிடுவோம், தீவிரமாகக் களத்தில் இறங்குவோம் என்று ராகுல் காந்தி தனது சிங்கப்பூர் பயணத்தின் மாயாவதி, அகிலேஷ் கருத்து குறித்து பேட்டி அளித்தார்.

இதனால், நாட்டிலேயே மிகப்பெரிய மாநிலமான உ.பியில் 80 தொகுதிகளில் கணிசமான தொகுதிகளில் வெற்றியைப் பெறும் நோக்கில் பல்வேறு கட்ட ஆலோசனைகளில் காங்கிரஸ் கட்சி ஈடுபட்டு வந்தது.

அந்த ஆலோசனையில் முக்கிய நகர்வாக அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்த பிரியங்கா காந்தியை தீவிர அரசியலுக்கு முதல்முறையாகக் களமிறங்கியுள்ளார் காங்கிரஸ் தலைவரும், அவரின் சகோதரருமான ராகுல் காந்தி.

கொடா நாட்டில் நடந்துள்ள கொலைகள் எடப்படி உடன் பதவிவிலக வேண்டும்

போர்க்கொடி தூக்கும் திமுக: நாளை ஆர்பாட்டத்துக்கு அழைப்பு



கொடநாடு விவகாரத்தில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி மீது குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், அவர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, இன்று 24 -ம் தேதி ஆளுநர் மாளிகை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மு.க.ஸ்டாலின் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "கொடநாடு விவகாரத்தில் ஒரு கொலை நடந்துள்ளது. மூன்று பேர் விபத்தில் கொல்லப்பட்டனர். ஒருவர் மீது கொலை முயற்சி செய்யப்பட்டு தப்பி உள்ளார். ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். இந்த விவகாரத்தில் நேரடியாகத் தொடர்புடைய சயன், மனோஜ் ஆகிய இருவரும் ஜெயலலிதாவின் கார் டிரைவரான கனகராஜ் சொல்லித்தான் கொள்ளை சம்பவத்தில் இறங்கியதாகச் சொல்கிறார்கள்.

எடப்பாடி பழனிசாமிக்காகத்தான் இதனை நான் செய்கிறேன் என்று கனகராஜ் தன்னிடம் சொன்னதாக சயன், மனோஜ் ஆகிய இருவரும் சொல்கிறார்கள். ஆயிரம் கோடி ரூபாய் பணம் இருந்ததாகவும் சில ஆவணங்களை எடுக்க வேண்டும் என்றும் அதற்காக 5 கோடி ரூபாய் பேரம் பேசப்பட்டது என்றும் சயன் சொல்லி இருக்கிறார். இந்த விவகாரம் முடிந்த பிறகு கனகராஜ் மர்மமான முறையில் விபத்துக்குள்ளாகிறார். சயன் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவரது மனைவியும், மகளும் இறக்கிறார்கள். சயன் உயிர் தப்புகிறார். கொடநாடு பங்களாவின் சிசிடிவி ஆபரேட்டர் தினேஷ்குமார் மர்மமான முறையில் தற்கொலை செய்து கொள்கிறார்.


இந்த கொலை, கொள்ளை, தற்கொலை, விபத்துகள் அனைத்துமே முதல்வர் எடப்பாடி பழனிசாமி மீது குற்றச்சாட்டாக வைக்கப்படுகிறது. கடந்த இரண்டு வாரங்களாக இந்த விவகாரம் மீடியாக்களில் கண்கூசும் அளவுக்குப் போய்க்கொண்டு இருக்கிறது. ஆனால் நேரடியாக இதற்கு முதல்வர் இதுவரை பதில் சொல்லவில்லை. சுற்றி வளைத்து ஏதேதோ பேசுகிறார்.

இப்பிரச்சினை குறித்து நான், கடந்த 14-1-2019 அன்று ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை நேரில் சந்தித்து, பத்திரிகையாளர் மாத்யூ வெளியிட்ட கொடநாடு நிகழ்வுகள் குறித்து முதல்வர் எடப்பாடி பழனிசாமி மீது அரசியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்

- நேர்மையான விசாரணை நடைபெற முதல்வர் பதவியிலிருந்து விலகிட அறிவுறுத்தவும்

- நேர்மையான ஐஜி தலைமையில் ஒரு சிறப்பு புலனாய்வுக்குழுவை ஏற்படுத்தி மேல் விசாரணை நடத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை மனு அளித்தேன். ஆனால், இன்று வரை அக்கோரிக்கை மனுமீது எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை.

எனவே, முதல்வர் எடப்பாடி பழனிசாமி உடனடியாக முதல்வர் பதவியிலிருந்து விலகிட வேண்டுமென்றும் தமிழக ஆளுநர் முதல்வர் மீது அரசியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் நேர்மையான ஐஜி தலைமையில் ஒரு சிறப்பு புலனாய்வுக்குழுவை ஏற்படுத்தி மேல் விசாரணை நடத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி, இன்று வியாழக்கிழமை (24-ம் தேதி) அன்று காலை 10.00 மணியளவில், சென்னை, கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை முன்பு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் ஜெ.அன்பழகன், எம்எல்ஏ - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன், எம்எல்ஏ - சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு, எம்எல்ஏ - சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், எம்எல்ஏ ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்" என மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்



யானைக்கும் அடி சறுக்கியுள்ளது சாணக்கியமும் சறுக்கி விட்டது

இன அழிப்புக்கு இடமுண்டு என்கிறார் விக்கி

வடக்கு, கிழக்கு இணைப்பு கிழக்குத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும் அவர்களின் தனித்துவத்தைப் பேணவும் அத்தியாவசியமானது. வடக்கு, கிழக்கு இணையாவிட்டால் கிழக்கில் இன அழிப்புக்கு காலக்கிரமத்தில் இடம் உண்டு. அழிக்கப்படும் இனம் பாரம்பரியமாக நூற்றாண்டுகள் காலம் அங்கு வாழ்ந்த தமிழ் இனமாகவே இருக்கும் என்று வடக்கின் முன்னாள் முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்கும் ஏக்கிய இராஜ்ய பதம் கொண்ட வடகிழக்கு இணைப்பற்ற சமஷ்டி அற்ற புதிய அரசியல் அமைப்பின் வரைவு பற்றி உங்கள் கருத்தென்ன என்று விக்கினேஸ்வரனிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இந்த பதிலை அளித்துள்ளார்.

அந்த பதிலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு முக்கிய காரணம் தமிழ் மக்களின் பலவருட கால எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதே என்பது எமது எண்ணம். ஆனால் இவ்வருடம் மார்ச் மாதத்திற்கு முன்னர் தமிழர் சம்பந்தமாக நாம் ஏதோ சில நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம் என்று ஜெனிவாவில் எடுத்துக் காட்டி அரசாங்கத்திற்கு மேலும் தவணை எடுக்க வேண்டியுள்ளது. எமது எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வது அவர்களின் நோக்கமல்ல. ஜெனிவா பிரச்சினையில் இருந்து தப்பி விடவேண்டும் என்பதே அவர்களின் அதியுச்ச அவாவாகும் ஆசையுமாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் களைந்து அவர்களை நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நீரோட்டத்தினுள் அணைத்துச் செல்வது அரசாங்கத்தின் நோக்காக இருந்திருந்தால் தொடக்கத்திலேயே தமிழ் மக்கள் ஏன் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்க முன் வருகின்றார்கள் இல்லை? ஏன் ஏக்கிய ராஜ்யவுக்கு அவர்கள் எதிர் ஏன் வடகிழக்கு இணைப்பைக் கேட்கின்றார்கள் ஏன் சமஷ்டி முறையே சிறந்தது என்று கூறுகின்றார்கள் என்பதை அலசி ஆராய்ந்திருப்பார்கள். அது அவர்களின் நோக்கமன்று. சிங்கள ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றி தமிழ் மக்களைத் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க என்ன செய்யலாம் என்பதே அவர்கள் குறிக்கோள். புதிய அரசியல் யாப்பு அதற்கான கண்துடைப்பு. அதில் தேர்தல் பற்றி வேறு விடயங்கள் பற்றி வருவது தமிழர்களுக்கு நாம் எதுவும் கொடுக்க இவ்வரைவைக் கொண்டு வரவில்லை என்று சிங்கள மக்களுக்கு கூறுவதற்காகவேயாகும்.

நாம் கேட்கும் எதுவும் கிடைக்கப்போவதில்லை என்ற சிந்தனையுடனயே தமிழர்கள் சார்பில் எமது பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் கருத்துப் பரிமாறி உள்ளார்கள் என்பது போலத் தெரிகின்றது. அதாவது அரசாங்கம் இந்த அளவு தான் தர முடியும் என்று கூறியதை அதாவது பௌத்தத்திற்கு முதலிடம், ஒற்றையாட்சி, வடகிழக்கு இணைப்பில்லை, சமஷ்டி இல்லை என்பவற்றை வைத்து அவற்றை எப்படித் தமிழ் மக்களிடம் அவர்கள் முகம் சுழிக்காமல் கொண்டு செல்லலாம் என்று சிந்தித்தே நடவடிக்கைகளில் இறங்கி இருக்கின்றார்கள் எங்கள் பிரதிநிதிகள் என்பது கண்கூடு. சுருக்கமாகக் கூறுவதானால் "தரமாட்டோம்" என்றவர்களிடம் "நீங்கள் தருவதைத் தாருங்கள் நாங்கள் அதை எமது மக்களிடம் விற்கின்றோம்" என்று கூறியே இந்த வரைவைப் பெற்றுள்ளார்கள் எம்மவர்கள் போலத் தெரிகின்றது.

ஏக்கிய இராஜ்ய என்றால் ஒற்றை நாடு. ஏக்கிய இரஜய என்பது ஒற்றையாட்சி. சிங்களத்தில் இராஜ்ய என்பது நாடு என்று தமிழில் பொருள்படும். இரஜய என்பது ஆட்சி என்று தமிழில் பொருள்படும். ஆகவே ஏக்கிய இராஜ்ஜிய என்பது ஒற்றை நாடே ஒளிய ஒருமித்த நாடல்ல. ஆனால் ஒற்றை நாட்டை ஒருமித்த நாடு என்று குறிப்பிட்டு எங்கள் மக்கள் பிரதிநிதிகள் குழப்பத்தை விளைவித்து வருகின்றார்கள். அதாவது "ஒற்றை"யை "ஒருமித்த" என்ற விதத்தில் எமக்கு விற்கப் பார்க்கின்றார்கள்!

ஆனால் "ஒருமித்த நாடு" என்று கூறும் போது பிரிந்திருக்கும் அலகுகளை ஒன்றுபடுத்திய நாடு என்று பொருள்படும். அவ்வாறு ஒன்றுபடுத்தியதை சிங்களத்தில் "எக்சத் இராஜ்ஜிய" என்பார்கள். "ஏக்கிய இராஜ்ஜிய" என்று கூறமாட்டார்கள். நீங்கள் கூறும் விடயங்கள் பற்றி எம்மவர் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை என்று தெரிகின்றது. அதனால் அரசாங்கத்திற்கு சில விடயங்களைத் தெரியப்படுத்தவில்லை போலத் தெரிகின்றது.

எவை எவை எந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அந்த இடத்தில் இருப்பது தான் அதற்கழகு. நாம் வழி பிறழ்ந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெருநஷ்டம் ஏற்படும் என்பதற்கு பண்டாவும் பௌத்த பிக்குகளும் உதாரணம்.

இதை ஏன் சொல்கின்றேன் என்றால் நாங்கள் பௌத்தத்திற்கு முதலிடத்தை அரசியல் யாப்பில் இடப் போய் புத்த பிக்குகள் இலங்கை பூராகவும் "இது பௌத்த நாடு நாங்கள் எங்கு வேண்டுமானாலும் புத்த விகாரைகளைக் கட்டலாம் புத்தர் சிலைகளை அமைக்கலாம்" என்று கூறி வடகிழக்கு மாகாணங்களில் தற்போது அலைந்து திரிகின்றார்கள். அவர்கள் பௌத்தத்தின் மேல் உள்ள அன்பில் மதிப்பில் இதைச் செய்யவில்லை. சிங்கள மேலாதிக்கத்தை உறுதிப்படுத்த இவ்வாறு நடக்கின்றார்கள். உள்ளூர் அதிகாரசபைகளின் அனுமதி பெறாமலேயே அவ்வாறு கட்டவும் அமைக்கவுந் துணிந்து விட்டார்கள். ஆகவே "இருந்து விட்டுப் போகட்டுமே" என்று கூறுபவர்கள் வட கிழக்கு மாகாணங்கள் பூராகவும் பௌத்த சின்னங்களையும் புத்த விகாரைகளையும் காலக்கிரமத்தில் எதிர்பார்க்க வேண்டும். அத்துடன் அது நின்றுவிடாது. விகாரையைச் சுற்றி முதலில் பிக்குமார், அதன்பின் அவர்களின் "தாயக்கர்கள்" அல்லது புரவலர்கள் வீடுகள் அமைப்பார்கள். குடியிருக்க வருவார்கள். வடகிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் பிரசன்னம் கூடும். எமது தனித்துவம் பறிபோய்விடும்.

வடகிழக்கு இணைப்பை ஏன் நாங்கள் கோருகின்றோம் என்பதை எம்மவர்கள் அரசாங்கத்திற்குச் சரியாகப் புரிய வைத்தார்களோ தெரியாது. வடக்கும் கிழக்கும் இப்பொழுது கூட பெரும்பான்மையாக தமிழ்ப் பேசும் பிரதேசங்களே. . வவுனியாவில் உள்ள எமது சகோதர இனம் நன்றாகத் தமிழ் பேசுவார்கள். அவர்கள் தமிழ் மொழியுடனும் தமிழர்களுடனும் தமிழ் கலாசாரத்துடனும் தொடர்புபட்டவர்கள். ஆனால் அண்மைக் காலங்களில் முல்லைத்தீவிலும் வவுனியாவிலும் குடியேற்றப்பட்டவர்கள் அப்படியில்லை. துவேஷம் மிக்கவர்கள். தெற்கில் அடிமட்டத்தில் இருந்து வந்தவர்கள். பலர் குற்றவாளிகளாக நீதி மன்றங்களினால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் காணப்பட்டவர்கள் ஆகவே வட கிழக்கு பிரிக்கப்பட்டால் சிங்கள ஆதிக்கம் பெருகும். வடகிழக்கு இணைக்கப்படாவிட்டால் கிழக்கு மாகாணம் தமிழர்கள் கையில் இருந்து பறிபோய்விடும்.

1881ம் ஆண்டில் தமிழர்கள் 60 சதவிகிதமும் முஸ்லீம்கள் 35 சதவிகிதமும் சிங்களவர்கள் 5 சதவிகிதமும் கிழக்கில் இருந்தார்கள். 1946ல் முஸ்லீம் மக்கள் 35ல் இருந்து 39 சதவிகிதத்துக்குப் பெருகினார்கள். தமிழர்கள் 60 சதவிகிதத்தில் இருந்து 54 சதவிகிதத்துக்குக் குறைந்தார்கள். சிங்களவர்களில் மாற்றம் இருக்கவில்லை. 5 சதவிகிதமாகவே இருந்தார்கள். முஸ்லீம் மக்களின் பெருக்கம் வழக்கமாகவே மற்றைய இனங்களிலும் பார்க்கக் கூடியதென்பதே இதற்குக் காரணமாக இருக்கக் கூடும். பல் தார மணங்கள் அம்மதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் 1946 தொடக்கம் சிங்கள மக்களின் தொகை மிக விரைவாகப் பெருகத் தொடங்கியது.

1981ல் தமிழர்களின் ஜனத்தொகை 42 சதவீதமாகக் குறைந்தது. முஸ்லீம்களின் ஜனத்தொகை 32 சதவீதமாகக் குறைந்தது. சிங்களவரின் ஜனத்தொகை 5 சதவிகிதத்தில் இருந்து 25 சத விகிதத்திற்குப் பெருகியது. இதேவாறு பெருக்கம் நிலைத்திருந்தால் 2031ல் சிங்களவர்கள் ஜனத்தொகை 50 சதவிகிதமாக ஏறியிருக்கும். போர் வந்ததால் அவர்கள் ஜனத் தொகை குறைந்தது. முஸ்லிம்கள் தொகை 35 சதவிகிதத்திலேயே நின்றது. ஆனால் தமிழரின் ஜனத் தொகை வருடா வருடம் குறைந்து கொண்டு போகின்றது. ஆகவே வடகிழக்கு இணைப்பு தமிழர்களுக்கு மிக அவசியம் ஆகின்றது. இல்லையேல் அவர்களின் மொழி, காணிகள், அவர்களின் அடையாளங்கள், பாரம்பரியங்கள் எல்லாமே அழிந்து விடுவன.

வடகிழக்கு இணைப்பு கிழக்குத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும் அவர்களின் தனித்துவத்தைப் பேணவும் அத்தியாவசியமானது. வடகிழக்கு இணையாவிட்டால் கிழக்கில் இன அழிப்புக்கு காலக்கிரமத்தில் இடம் உண்டு. அழிக்கப்படும் இனம் பாரம்பரியமாக நூற்றாண்டுகள் காலம் அங்கு வாழ்ந்த தமிழ் இனமாகவே இருக்கும்.


மூன்றாவது சமஷ்டியின் அவசியம் பற்றியதாகும்.

31ஆம் பக்கம் பார்க்க

> எமது தமிழ் அரசியல்வாதிகளின் "ஒருமித்த நாடு" என்ற கருத்தை ஏற்று கொள்ளமாட்டார்கள். ஆகவே பிறரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல் எம்மை நாமே ஆள சமஷ்டி முறை தான் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதுவே தந்தை செல்வாவின் விருப்பமும். சமஷ்டி எவ்வாறு சிங்கள மக்களுக்குப் பாதகம் விளைவிக்கும் என்பதைச் சிங்கள அறிவியலாளர்கள் எமக்குக் கூற வேண்டும். அவற்றிற்கான தக்க பதிலை நாம் தருவோம். உண்மையில் சமஷ்டியானது வெவ்வேறு மாகாணங்களில் வாழும் சிங்கள மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையும்.

ஜெயலலிதா சிகிச்சை குறித்து பன்னீருக்குத் தெரியும் ஆனாலும் அவர் பலவற்றை மறைத்துச் சொன்னார்

விசாரணை ஆணையத்தில் சசிகலா வழக்கறிஞர் பரபரப்புத் தகவல்



"ஜெயலலிதாவின் மருத்துவ சிகிச்சை குறித்து பன்னீர்செல்வத்துக்கு முழுமையாகத் தெரிந்திருந்தும் அவர் மறைத்துச் சொன்னார் என்பதை விஜயபாஸ்கரிடமிருந்து சாட்சியமாக வாங்கியுள்ளேன்" என சசிகலா தரப்பு வழக்கறிஞர் ராஜா செந்தூர் பாண்டியன் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா மரணம் மர்மம் தொடர்பான விசாரணைக்காக ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தில் நேற்று முன்தினம் சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர் ஆஜரானார். காலை 10 மணியளவில் ஆஜரான அவரிடம், மாலை 4 மணி வரை விசாரணை நடைபெற்றது. அதில் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள், வெளிநாட்டு சிகிச்சைக்கு அழைத்து செல்லாத விவகாரம் உள்ளிட்ட பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

விசாரணைக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் விஜயபாஸ்கர், "ஆணையம் கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளித்தேன். விசாரணைக்கு முழு ஒத்துழைப்பையும் அளித்தேன். குறுக்கு விசாரணையும் நடைபெற்றது. நடந்த நிகழ்ச்சிகளை அவர்களிடம் விரிவாகக் கூறியுள்ளேன்" என்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து பேட்டியளித்த சசிகலா தரப்பு வழக்கறிஞர் ராஜா செந்தூர் பாண்டியன், "ட்ரக்யாஸ்டமி சிகிச்சைக்காக 7.10.2016 அன்று ஜெயலலிதாவை ஸ்டெச்சரில் அழைத்துச் செல்லும்போது என்னை கடந்துதான் அழைத்துச் சென்றார்கள். அப்போது அவரை நான் மிக அருகாமையில் பார்த்தேன் என்று விஜயபாஸ்கர் சாட்சியமளித்தார். வெளிநாட்டு சிகிச்சை, அமைச்சரவைக் கூட்டம், எப்படிப்பட்ட சிகிச்சை வழங்கப்பட்டது, எய்ம்ஸ் மருத்துவர்கள் தொடர்பு, மத்திய அரசு எந்த அளவுக்கு உறுதுணையாக இருந்தது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து சுகாதாரத் துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் என்ன சாட்சியம் அளித்தாரோ அதைத்தான் எந்த வேறுபாடும் இல்லாமல் விஜயபாஸ்கரும் சாட்சியமாக அளித்தார்" என்று தெரிவித்தார்.

"குறுக்கு விசாரணையில் விஜயபாஸ்கர் பல விஷயங்களை தெளிவாகப் பதிவு செய்தார். அமைச்சரவைக் கூட்டம் யார் தலைமையில் நடந்தது, யார் இருந்தனர், என்ன தீர்மானம் இயற்றினீர்கள் என்ற கேள்வியை எழுப்பினேன். அமைச்சர்கள் அனைவரும் சேர்ந்து முடிவெடுத்தோம் என்று பதிலளித்தார். ஜெயலலிதா பூரண நலம் பெற்று பணியைத் தொடர வேண்டும் என்று தீர்மானம் இயற்றப்பட்டதாக தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் குறிப்பிட்டிருந்ததையே விஜயபாஸ்கரும் தெரிவித்தார்" என்று குறிப்பிட்ட ராஜா செந்தூர் பாண்டியன், சட்ட அமைச்சர் சி.வி.சண்முகம் அமைச்சரவைக் கூட்டம் நடக்காததற்கு நானே சான்று என்று கூறுகிறார். ஆனால், அதே அமைச்சரவையில் இருந்த அமைச்சர் விஜயபாஸ்கர் நடந்தது என்கிறார் என்றும் முரண்பாட்டை சுட்டிக்காட்டினார்.

இதைத் தொடர்ந்து, "வெளிநாடு சிகிச்சை குறித்து ஓபிஎஸ் உள்பட யாராவது பேசினார்களா என்ற கேள்விக்கு அப்படி யாரும் பேசவில்லை, அதுபோன்ற சூழ்நிலை எதுவும் எழவில்லை என்று விஜயபாஸ்கர் பதிலளித்தார். ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரணை ஆணையம் அமைக்க வேண்டுமென பன்னீர்செல்வம் கோரிக்கை விடுத்தபோது, அப்படி விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டால் விஜயபாஸ்கர்தான் முதல் குற்றவாளியாக இருப்பார் என்று பன்னீர்செல்வம் கூறியிருந்தார். அப்படி விசாரணை ஆணையம் அமைத்தால் பன்னீர்செல்வத்தைத்தான் முதலில் விசாரிப்பார்கள் என்று விஜயபாஸ்கர் பதிலளித்தது என இரண்டு காணொளிகளையும் விஜயபாஸ்கருக்குப் போட்டுக் காண்பித்தோம். இரண்டும் உண்மை என்று தெரிவித்தார். இதில் எது சரி என்று கேட்டேன். கருத்துச் சொல்ல விருப்பமில்லை என்று கூறிவிட்டார்" என்றும் கூறினார்.

மேலும், "பன்னீர்செல்வம் காழ்ப்புணர்வோடுதான் செயல்பட்டார். மருத்துவ சிகிச்சை குறித்து அவருக்கு முழுமையாகத் தெரிந்திருந்தும்கூட, அவர் மறைத்துச் சொன்னார் என்பன உள்ளிட்ட பல விஷயங்களை விஜயபாஸ்கர் வாயிலாகவே சாட்சியமாக வாங்கியுள்ளேன். இதற்கு விஜயபாஸ்கர் ஒத்துழைத்தார் என்று சொல்ல முடியாது. மிகக் கடினமாக பல கேள்விகளை கேட்டு, அதில் கிடைக்கக் கூடிய பதில்களைச் சாட்சியமாகப் பெற்றுள்ளேன்" என்றும் விசாரணையின்போது நடந்தவற்றை ராஜா செந்தூர் பாண்டியன் விளக்கினார்.

கறுப்பு அறிக்கையாக மாறுவதற்கு முன்னோடியாக வெள்ளை அறிக்கையாக மாறும் உத்தேச நகல் அரசியல் யாப்பு

மு.திருநாவுக்கரசு



1968ஆம் ஆண்டு மாவட்டசபை மசோதாவை சட்டமாக்காமல் அதை வெள்ளை அறிக்கையாக மாற்றி பின்பு தீயிட்டுச் சாம்பல், கறுப்பு அறிக்கையாக மாற்றிய கதையையும், தமிழரசுக் கட்சியை 5 ஆண்டுகளாக ஏமாற்றி தம் ஆட்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த ஐதேகவின் திறமையையும் இங்கு மீண்டும் மீட்டு ஒப்பிட்டுப் பார்க்குமாறு இன்றைய அரசியல் போக்கு ஆணையிடுகிறது.

அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தலைமையிலான அமைச்சர் குழு கடந்த 18ஆம் தேதி தனித் தனியே மல்வத்த பீடாதிபதியையும், அஸ்கிரிய பீடாதிபதியையும் சந்தித்தது. உத்தேச அரசியல் யாப்பு நகல் தொடர்பான விளக்கங்களை பீடாதிபதிகளுக்கு அளிப்பதற்கான சந்திப்பாக இது அமைந்தது.

நாடாளுமன்றத்தில் பல தரப்பினரதும் கருத்துக்களை அறிந்து பின்பு ஒரு சட்ட வரைவை உருவாக்குவதற்கான ஓர் ஆவணமாக இந்த நிபுணர் குழு அறிக்கை அமைந்துள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல மல்வத்த பீடாதிபதியிடம் கூறினார். அவர் கூறிய விளக்கத்தைப் பார்க்கும் போது இந்த உத்தேச அரசியல் யாப்பின் நகலானது ஒரு "வெள்ளை அறிக்கை" நிலைக்கே உரியது என்ற விளக்கத்தைக் கொண்டுள்ளது.

மாவட்ட சபை மசோதாவை 1968ஆம் ஆண்டு ஒரு வெள்ளை அறிக்கையாக மாற்றிய அனுபவத்தை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுள்ளது. அப்படியே இந்த யாப்பு முன்வரைவு பற்றிய விடயங்களும் ஒரு வெள்ளை அறிக்கை பின்பு சாம்பல், கறுப்பு அறிக்கை என்ற நிலையுடன் தன் ஆயுளை முடித்துக் கொள்ளப் போகிறது என்பது தெளிவாக உள்ளது.

"வெள்ளை அறிக்கை" என்ற பதம் பிரித்தானிய அரசியலில் குறிப்பாக 1922ஆம் ஆண்டிலிருந்து பிரயோகத்திற்கு வந்தது. வெள்ளை அறிக்கை (White Paper), நீல அறிக்கை (Blue Book), பச்சை அறிக்கை (Green Paper) எனப் பலவகை அறிக்கைகள் உள்ளன. அறிக்கையின் முகப்பு அட்டையின் நிறத்தை வைத்தே இவற்றிற்கான பெயர்கள் இடப்பட்டன. அதாவது இத்தகைய நிற அறிக்கைகள் எதுவும் இறுதியானவை அல்ல என்பதே இதன் அடிப்படை உண்மையாகும்.

வெள்ளை அறிக்கை என்பதன் பொருள் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவும், அவர்களது அபிப்பிராயங்களை அறிவதற்குமான ஓர் ஆவணம் என்பதாகும். இந்த அர்த்தத்திற்தான் தற்போது நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள உத்தேச அரசியல் யாப்பு நகல் உள்ளது என்பதை பீடாதிபதிகளிடம் அமைச்சர் குழு தெரிவித்துள்ளது. அதற்கு மல்வத்த பீடாதிபதி அளித்த பதில் மிகவும் சுவாரஸ்ஸியமானது. அதாவது இந்த ஆண்டில் பல தேர்தல்கள் நடைபெற உள்ளன. அவையெல்லாம் நடந்து முடிந்த பின்பு இதைப் பற்றி சிந்திக்கலாம். இப்போது அவசரப்பட வேண்டியதில்லை என்பதே அந்தப் பதிலாகும். இந்த வெள்ளை அறிக்கைகூட சாம்பல் அறிக்கையாக மாறப் போவதற்கான கட்டியமாகவே மேற்படி மல்வத்த பீடாதிபதியின் கருத்து அமைந்துள்ளது.

வெள்ளை அறிக்கை தயாரிக்கும் நடைமுறை சார்ந்த ஐதேகவின் அனுபவத்தை ஒருபோதும் குறைத்து மதிப்பிடக் கூடாது. இதற்கு உதாரணமாக மாவட்டசபை மசோதாவை (District Council Bill 1968) மிக வெற்றிகரமாக ஒரு வெள்ளை அறிக்கை வடிவத்தோடு டட்லி சேனநாயக்க அரசாங்கம் கதையை முடித்துக் கொண்டதைக் கூறலாம். ஐதேகவின் இந்த நுணுக்கமான கையாளலையும் அதில் இருந்து தமிழ் மக்கள் கற்றிருக்கக்கூடிய படிப்பினையையும் இங்கு ஒரு கணம் மீட்டு ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம்.

1965ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியுடன் கூட்டுச் சேராமல் அரசாங்கத்தை அமைக்க முடியாது என்ற நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்தது. இந்நிலையில் "தேசிய அரசாங்கம்" என்ற பெயரில் தமிழரசுக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஐதேக ஆட்சி அமைத்தது. அப்போது அதன்பொருட்டு டட்லி - செல்வா ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு வருடத்திற்குள் மாவட்ட சபைகள் அமைக்கப்படும் என்று ஒப்பந்தமானது.

ஆனால் ஒரு வருடம் கடந்தும் எந்தவித முன்னேற்றமும் இல்லாத நிலையில் 1967ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்க அரசாங்கத்தை தந்தை செல்வா வற்புறுத்தத் தொடங்கினார். இந்நிலையில் ஐதேக வின் மூளையாக செயற்பட்டு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஓர் உபாயத்தை வகுத்தார்.

அதாவது ஏரிக்கரை ஆங்கில பத்திரிகை ஆசிரியர் ஒருவரை அழைத்து தமது அரசாங்கத்திற்கு செல்வநாயகம் நெருக்கடி கொடுப்பதாகவும், அதனை தவிர்ப்பதற்கு பத்திரிகை செயலாற்ற வேண்டுமென்றும் ஜெவர்த்தன அந்த பத்திரிகை ஆசிரியரிடம் கூறினார். எனவே மாவட்டசபை சம்பந்தமான மசோதாவை உருவாக்குவது நாட்டைப் பிளப்பதற்கான செயல் என்ற வகையில் அதற்கு எதிர்ப்பு ஏற்படக்கூடியவாறு பத்திரிகையில் கட்டுரைகளும், ஆசிரியர் தலையங்கமும் தீட்டப்பட வேண்டும் என்று ஜெயவர்த்தன கேட்டுக் கொண்டார். இதன்படி அந்த பத்திரிகை ஆசிரியர் பத்திரிகையில் தனது சதிகார யுத்தத்தை ஆரம்பித்தார். அதைப் பின்பற்றி சிங்களப் பத்திரிகைகளும் நெருப்பைப் பற்றி எரியவைத்தன.

செல்வநாயகத்திடம் இப்பத்திரிகைச் செய்திகளை டட்லி சேனநாயக்க காண்பித்து அதன் அடிப்படையில் மாவட்டசபை அமைப்பது பற்றிய விடயத்தை ஒத்திப்போட முடிந்தது.

எப்படியோ இதன் மூலம் மேலும் ஓர் ஆண்டை வெற்றிகரமாகத் தாண்ட ஐதேகாவால் முடிந்தது. மேற்படி தகவல்களை சிங்கள இனத்தவரும், ஆங்கில பத்திரிகையாளரான திரு. காமினி நவரட்ண தனிப்பட்ட உரையாடல் ஒன்றின்போது என்னிடம் தெரிவித்திருந்தார். ஜெயவர்த்தன அழைத்திருந்த அந்த ஆங்கிலப் பத்திரிகையாளர் தனது நண்பர் என்றும் அவர் கூறிய தகவல்களையே தான் என்னிடம் கூறுவதாகவும் காமினி நவரட்ண தெரிவித்தார்.

இதன் பின்பு தொடர்ந்தும் செல்வநாயகத்தால் அமைதிகாக்க முடியாது இருந்தது. இந்நிலையில் 1968ஆம் ஆண்டு மாவட்டசபை மசோதாவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஐதேக ஒப்புக்கொண்டது. ஆனாலும் அதனை ஒரு வெள்ளை அறிக்கையாக குறுக்கி இறுதியில் ஐதேக அதற்கு சமாதி கட்டியது. இதுபற்றி சற்று விரிவாக நோக்க வேண்டியது அவசியம்.

தமிழரசுக் கட்சியில் தந்தை செல்வாவின் மூளையாக ஆரம்பகாலத்தில் செயற்பட்டவர் கோப்பாய் கோமன் என்று அழைக்கப்படும் கு.வன்னியசிங்கம். அதாவது கொழும்பை மையமாகக் கொண்ட செல்வாவிற்கு தமிழ் மக்களின் வாழ்வோடு பரீட்சையமான ஒரு மூளைசாலி அவசியப்பட்டது. அது கு.வன்னியசிங்கமாக அமைந்தது. வன்னியசிங்கத்தின் திடீர் மரணத்தோடு அந்த இடம் வெற்றிடமானது. பின்பு அந்த இடத்தை நிரப்பக்கூடிய செல்வாவின் மூளையாகச் செயற்பட்டவர் காவலூர் நவரத்தினமாவர். 1965ஆம் ஆண்டுவரை அவரே அந்தப் பாத்திரத்தை பெரிதும் வகித்தார். 1962ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம் சம்பந்தமான திட்டமிடல், பின்பு அதனை முடிவிற்குக் கொண்டுவருதல் தொடர்பாக அனைத்து வகையிலும் செல்வநாயகத்தின் மூளையாக நவரத்தினம் செயற்பட்டார்.

ஆனால் 1965ஆம் ஆண்டு ஒரு புது இரசாயன மாற்றம் ஏற்பட்டது. 1965ஆம் ஆண்டோடு செல்வநாயகத்தின் மூளையாக கொழும்பை மையமாகக் கொண்ட மு.திருச்செல்வம் பாத்திரம் வகிக்கலானார். அதனோடு நவரத்தினத்தின் பாத்திரத்திற்கு முடிவு கட்டப்பட்டது.

மகாநாயக்கர்களின் அனுமதி பெற்றே புதிய அரசியல் அமைப்பை தயாரிப்போம் என்று ஐதேகவின் செயலாளரும் அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். இதனை மல்வத்த பீடாதிபதியின் பதிலோடு இணைத்துப் பார்த்தால் வெள்ளை அறிக்கைக்கான சமாதி கண்ணில் தெரியும்.



31ஆம் பக்கம் பார்க்க

நிலாந்தன்

யாப்பு மாயை?

சவேந்திர டி சில்வாவை படைப்பிரதானியாக பதவி உயர்த்தியதன் மூலம் மைத்திரி மேற்கு நாடுகளுக்கும், ஐ.நாவுக்கும் தமிழ்த்தரப்பிற்கும் ஒரு செய்தியை உணர்த்த விரும்புகிறார். அதாவது போர்க்குற்ற விசாரணைகளுக்கு அவர் ஒத்துழைக்கப் போவதில்லை. அதோடு 2015 செப்ரெம்பர் மாதம் அவருடைய தலைமையிலான அரசாங்கம் இணை அனுசரணையாளராகச் செயற்பட்டு நிறைவேற்றிய முப்பதின்கீழ் ஒன்று ஐ.நாத் தீர்மானத்தையும் அவர் மதிக்கப் போவதில்லை. அத் தீர்மானத்தின் படி குற்றச்சாட்டிற்கு உள்ளாகியிருக்கும் படைப்பிரதானிகளை விசாரிப்பதற்கும் அது தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கும் இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டது. ஆனால் சவேந்திர டி சில்வாவை படைப்பிரதானியாக்கியதன் மூலம் தான் யாருக்கும் பொறுப்புக் கூறப் போவதில்லை என்பதனை மைத்திரி கூறாக உணர்த்தியிருக்கிறார்.

அவருடைய நியமனத்திற்கு முதலில் எதிர்வினையாற்றியது ஒஸ்திரேலியாதான். இலங்கைக்கான அந்நாட்டின் தூதுவர் சவேந்திர டி சில்வாவை எச்சரித்துள்ளார். அவர் ஒஸ்ரேலியாவிற்கு வருகை தந்தால் அங்கே புலம்பெயர் தமிழர்களால் தொடுக்கப்படும் போர்க்குற்ற வழக்குகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதே அவ் எச்சரிக்கையாகும். ஒஸ்ரேலியா எச்சரிக்கிறது என்று சொன்னால் அது மறைமுகமாக மேற்கு நாடுகளின் எச்சரிக்கைதான். ஒரு நாட்டின் படைப்பிரதானியை ஒரு வெளிநாட்டுத் தூதுவர் இப்படியாக எச்சரிப்பது என்பது சாதாரனமானது அல்ல.

அது போலவே பிரித்தானியாவின் நீதிமன்றம் ஒன்று அந்நாட்டிற்கான இலங்கைத் தூதரகத்தில் பணிபுரிந்த பிரகேடியர் ஒருவருக்கு பிடியாணை விடுத்திருப்பதும் சாதாரணமானது அல்ல. பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழர்களை நோக்கி கழுத்தை அறுப்பேன் என்று கைச் சமிக்ஞை மூலம் வெருட்டியதற்காகவே அவர் மீது இவ்வாறு பிடியாணை விடுக்கப்பட்டுள்ளது. மைத்திரிபால சிறிசேன மகிந்த அணிக்கு விசுவாசமாக மாறியபின் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் மேற்கு நாடுகள் தரப்பிலிருந்து காட்டப்பட்டிருக்கும் தெளிவான எச்சரிக்கைச் சமிக்ஞைகள் இவை.


ஒக்ரோபர் ஆட்சிக் குழப்பத்தில் தோற்கடிக்கப்பட்ட மகிந்த தரப்பு ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே இருக்கும் என்பது அண்மை வாரங்களாகத் தெளிவாகத் தெரியவந்திருக்கிறது. புதிய யாப்புருவாக்கத்திற்கு எதிராக அவர்கள் ஒரு புதிய இனவாத அலையை கிளப்பப் போகிறார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. யாப்புருவாக்க முயற்சிகளைக் குழப்பினால்தான் இப்போதிருக்கும் யாப்பின் பிரகாரம் அரசுத்தலைவருக்கான தேர்தலை இவ்வாண்டின் இறுதியில் எதிர்பார்க்கலாம். அத்தேர்தலில் யாரோ ஒரு ராஜபக்ஷ போட்டியிடலாம் என்பது தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது. அப்படியென்றால் யுத்த வெற்றிவாதத்திற்கு ஒரு புது வேகத்தைக் கொடுத்து ஒரு புதிய இனவாத அலையைத் தோற்றுவிக்க ராஜபக்ஷ அணி தயாராகி வருகிறது என்று அர்த்தம். அத்தேர்தலில் யாராவது ஒரு ராஜபக்ஷ வெற்றி பெற்றால்தான் அந்த அணிக்கு புதிய பாதைகள் திறக்கும். அவ் வெற்றியைத் தொடர்ந்து ஒரு நாடாளுமன்றத் தேர்தலையும் நடாத்தி அதில் எப்படியாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுவிடலாம் என்று அவர்கள் நம்பக்கூடும். அப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுவிட்டால் பத்தொன்பதாவது திருத்தத்தை அகற்றி விடலாம். அதன் மூலம் ராஜபக்ஷக்கள் மறுபடியும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் உள்ள பிரதான தடைகள் நீக்கப்பட்டுவிடும். எனவே ஓர் அரசுத்தலைவருக்கான தேர்தலை நோக்கி மகிந்த அணி வேகமாக உழைக்கத் தொடங்கிவிட்டது. இதை மறுவளமாகச் சொன்னால் யாப்புருவாக்க முயற்சிகளைக் குழப்பினால்தான் அவர்களுக்கு எதிர்காலமே உண்டு. அதற்காக தனது அமெரிக்க பிரஜாவுரிமையை இழக்கவும் கோத்தபாய தயாராகிவிட்டதாகத் தெரிகிறது. அவருடைய அண்மைக்கால அறிவிப்புக்கள் அதைத்தான் உணர்த்துகின்றன.

ஆனால் அது பரபரப்பிற்காக விடப்பட்ட ஓர் அறிக்கையா? என்ற சந்தேகங்களும் உண்டு. ஏனெனில் ஒரு புதிய யாப்பை உருவாக்குவதென்றால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும். அம்மூன்றில்இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதென்றால் எஸ்.எல்.எவ்.பிக்குள் இருந்து குறைந்தது 26 பேர்களையாவது கழட்டி எடுக்க வேண்டும். காசைத்தள்ளி அல்லது அமைச்சுப்பதவி என்ற ஆசையைக் காட்டி அவர்களை வென்றெடுப்பதற்கு ரணில் முயற்சிக்கக்கூடும். ஆட்சிக் குழப்பத்தின் பின் எஸ்.எல்.எவ்.பி இப்பொழுது நான்கு துண்டுகளாக உடைந்து காணப்படுகிறது. பெரிய துண்டு மகிந்தவிடம். சிறிய துண்டு மைத்திரியிடம். மற்றொரு சிறிய



துண்டு ரணிலோடு. இன்னும் ஒரு சிறிய துண்டு சந்திரிக்காவோடு. தன்னோடு நிற்கும் துண்டை பெருப்பிக்க ரணில் முயற்சிப்பார்.

இப்போதுள்ள யாப்பின்படி அமைச்சரவைக்கு எண்ணிக்கை வரையறையுண்டு. ஆனால் ஒரு கூட்டரசாங்கத்தை உருவாக்கும் பொழுது அந்த எண்ணிக்கை வரையறையை மீறலாம். எனவே தேவையான அளவு எஸ்.எல்.எவ்.பிக்காரர்களை இணைத்துக் கொண்டால் ஒரு கூட்டரசாங்கத்தை அதாவது ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கலாம். அப்படி ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்கக்கூடிய வாய்ப்புக்கள் இப்போதும் உண்டு என்று சுமந்திரன் இம்மாதத்தின் 13ம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் சூசகமாகத் தெரிவித்திருந்தார். கருத்துக்களால் களமாடுவோம் என்ற அந்தக் கூட்டத்தில் அவர் அதை சூசகமாகத் தெரிவித்திருந்தார். அப்படி ஒரு வாய்ப்பு இருப்பது உண்மையானால் ரணில் எஸ்.எல்.எவ்.பிக் காரர்களை கழட்டி எடுக்கப்போகிறார் என்றே அர்த்தம்.



“நாடாளுமன்றத்தில் உள்ள அத்தனை உறுப்பினர்கள் மத்தியிலும் ஒரு புதிய யாப்பு வருமென்று நம்பிக்கொண்டிருக்கும் ஒரேயொரு ஆள் உங்களுடைய சுமந்திரன்தான்”

அவ்வாறு தமது கட்சி உடைக்கப்படுவதைத் தடுக்க வேண்டிய தேவை ராஜபக்ஷக்களுக்கு உண்டு. எனவே அரசுத்தலைவருக்கான தேர்தலை நோக்கி தயாராகுவது போன்ற ஒரு தோற்றத்தை அவர்கள் எழுப்பவேண்டியுள்ளது. அதன் மூலம் எதிர்கால வெற்றிகளைக் குறித்த நம்பிக்கைகளை ஊட்டி தமது கட்சி ஆட்களை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க அவர்கள் முயற்சிக்கக்கூடும். யாப்புருவாக்கத்தைக் குழப்புவது என்பது அவர்களைப் பொறுத்தவரை கட்சி மேலும் உடைவதை தடுப்பதும்தான். இந்த நோக்கத்துடனேயே அரசுத்தலைவருக்கான தேர்தலை நோக்கிய ராஜபக்ஷக்களின் அறிவிப்புக்களையும் பார்க்க வேண்டியுள்ளது. அப்படிப் பார்த்தால் கோத்தபாய தன்னுடைய அமெரிக்கப் பிரஜாவுரிமையை மெய்யாகவே இழக்கத் தயாரா? என்ற கேள்வியும் எழும்.

31ஆம் பக்கம் பார்க்க

யானைக்கும் அடி சறுக்கியுள்ளது சாணக்கியமும் சறுக்கி விட்டது

இன அழிப்புக்கு இடமுண்டு என்கிறார் விக்கி

இறைமை பகிரப்பட்டு அதிகாரங்கள் பகிரப்பட்டு பாராளுமன்றத்திற்கு இணையான சட்டவாக்க அதிகாரத்தைப் பிராந்தியம் பெற்று, பகிரப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற முடியாதபடி ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட போது தான் அங்கு சமஷ்டி உருவாகின்றது. புதிய அரசியலமைப்பு வரைவு முழுமையான சமஷ்டி ஆட்சி முறைமையின் அம்சங்களைக் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. 2000ம் ஆண்டு சந்திரிக்கா அம்மையாரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசிலமைப்பு வரைவில் அரசானது மத்தியையும் பிராந்தியங்களையும் கொண்டதாக அமையும் என்று கூறப்பட்டது. தற்போதைய வரைவில் இலங்கை அதன் அரசியல் அமைப்பில் உள்ள தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற மத்திய மற்றும் மாகாணங்களைக் கொண்டிருக்கும் எனப்படுகிறது. இதில் மாகாண அரசாங்கம் எந்தளவிற்கு குறித்த தத்துவங்களை பிரயோகிக்க முடியும் என்பது கேள்விக் குறியாகி இருக்கின்றது.

புதிய அரசியலமைப்பு வரைவில் தடுமாற்றந் தருஞ் சொற்பிரயோகங்கள் பெரும்பான்மை மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் நீதித்துறையினருக்கு பக்கச் சார்பான தீர்மானங்களை வழங்க இடமளிக்கும். நாங்கள் சிங்களவருக்கு ஒரு முகம் தமிழர்களுக்கு இன்னொரு முகம் காட்ட முற்பட்டாலும் இந்த வரைவினால் வரும் பிரச்சினைகளை பெரும்பான்மையின நீதியரசர்களே தீர்க்கப் போகின்றார்கள். அவர்கள் "ஏகிய இராஜ்ய" என்பது ஒற்றையாட்சியே என்று தான் கருத்துக்கொள்வர். எமது தமிழ் அரசியல்வாதிகளின் "ஒருமித்த நாடு" என்ற கருத்தை ஏற்று கொள்ளமாட்டார்கள். ஆகவே பிறரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல் எம்மை நாமே ஆள சமஷ்டி முறை தான் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதுவே தந்தை செல்வாவின் விருப்பமும். சமஷ்டி எவ்வாறு சிங்கள மக்களுக்குப் பாதகம் விளைவிக்கும் என்பதைச் சிங்கள அறிவியலாளர்கள் எமக்குக் கூற வேண்டும். அவற்றிற்கான தக்க பதிலை நாம் தருவோம். உண்மையில் சமஷ்டியானது வெவ்வேறு மாகாணங்களில் வாழும் சிங்கள மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமையும்.

எது எவ்வாறெனினும் குறித்த வரைவு கூட தற்போது அலமாரியில் வைத்துப் பூட்டியாகிவிட்டது என்றே கொள்ள வேண்டியுள்ளது. நெருக்குதல் இல்லாமல் பெரும்பான்மை சிங்கள அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதுவுமே தர மாட்டார்கள் என்பது கண்கூடு. பிரதமர் ரணில் அவர்கள் அதனை அண்மையில் தெட்டத் தெளிவாக நிஷரூபித்து விட்டார். மனோ கணேசன் கூறியது போல் சிங்களத் தலைவர்களைத் தமது முன்மொழிவுகளைத் தருமாறு கூறிவிட்டு யாப்பைத் தயாரிக்க நாம் உதவியதை விட்டு விட்டு நாம் வேறு விடயங்களிலேனும் வெற்றி கண்டிருக்கலாம்.

பயங்கரவாத தடைச் சட்ட நீக்கம், அரசியல் கைதிகள் விடுதலை, பொது மக்கள் காணிகள் விடுவிப்பு, படையினரை வடக்கில் இருந்து நீக்குதல் என்று எத்தனையோ விடயங்களை ரணிலுக்கு உதவி தருவதற்கு முன் நிபந்தனையாக இட்டு சாதித்திருக்கலாம். இப்பொழுது யானைக்கு அடிசறுக்கியுள்ளது. அகங்காரத்திற்கு அடி கொடுக்கப்பட்டுள்ளது. சாணக்கியம் சறுக்கிப் போயுள்ளது.

கறுப்பு அறிக்கையாக மாறுவதற்கு முன்னோடியாக வெள்ளை அறிக்கையாக மாறும் உத்தேச நகல் அரசியல் யாப்பு

அக்காலகட்ட அரசியல் அனுபங்களை அறிந்து கொள்ளவதற்காக 1980ஆம் ஆண்டின் மத்தியில் பல ஞாயிறு நாட்களில் காவலூர் நவரத்தினம் அவர்களை சந்தித்துள்ளேன். அவர் பல வியப்பிற்குரிய அனுபவங்களை என்னிடம் தெரிவித்துள்ளார்.

ஏரிக்கரை பத்திரிகை அலுவலகத்தில் மிகவும் இரகசியமாக பூட்டப்பட்ட அறைக்குள் இருந்து 1965ஆம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தத்திற்கான நடவடிக்கைகள் நிகழ்ந்ததைப் பற்றி வர்ணித்தார். அப்போது டட்லி செனநாயக்கவிடமும், ஜெவர்த்தனவிடமும் காணப்பட்ட அவசரம் அரசாங்கம் அமைப்பது பற்றியதாக இருந்ததே தவிர இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது பற்றிய இதயசுத்தி வெளிப்படவில்லை என்று கூறினார்.

அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்ட அந்த ஒப்பந்த நகலில் இருக்கும் குறைகள் பல சுட்டிக் காட்டப்பட்ட போது நீல மையால் எழுதப்பட்ட அந்த நகலில் டட்லி செனநாயக்க தனது பச்சை மை பேனாவால் சில திருத்தங்களை மேற்கொண்டார் என்று கூறி கையால் எழுத்தப்பட்ட அந்த மூல அறிக்கையை அவர் என்னிடம் காண்பித்தார். யாழ் பல்கலைக்கழக அருங்காப்பகத்தில் அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கு அந்த மூல ஆவணத்தை தருமாறு அவரிடம் நான் வேண்டிய போதிலும் அவர் அதனை ஒப்படைக்க மறுத்தார்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவதில் எந்தவிதமான அக்கறையையும் டட்லி செனநாயக்கவோ, ஜெயவர்த்தனவோ பின்பு காண்பிக்கவில்லை என்று அவர் கூறியதுடன் கூடவே மு.திருச்செல்வம் சம்பந்தமாக பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் என்னிடம் விபரித்தார். அவை இங்கு முக்கியமல்ல.

அதாவது ஆரம்பத்தில் இதனோடு தொடர்புடைய நவரத்தினத்தின் பட்டறிவு இங்கு கருத்தில் எடுத்துக்கொள்ளப்படக் கூடியது. இதன்பின்பு மேற்கூறப்பட்டவாறு 1968ஆம் ஆண்டுவரை செல்வநாயகத்தை ஏமாற்றிவிட்டு இறுதியாக 1968ஆம் ஆண்டு யூன் 5ஆம் தேதி மாவட்டசபை வெள்ளை அறிக்கையை அமைச்சர் மு.திருச்செல்வம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். "கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக" இந்த வெள்ளை அறிக்கை வெளிவந்தது.

டட்லி - செல்வா ஒப்பந்தத்தில் இருந்து அதிக தூரம் விலகியதாக மாவட்டசபை மசோதா தயாரிக்கப்பட்டது. இறுதியில் ஒரு வெள்ளை அறிக்கையாகவே 1968 யூன் 5ஆம் தேதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது 8ஆம் தேதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது எதிர்க்கட்சித் தலைவரான திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான எதிர்க்கட்சியினர் வெள்ளை அறிக்கை நகலை துண்டு துண்டாக கிழித்து நாடாளுமன்றத்தில் பறக்கவிட்டனர். மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான T.B.தென்னக்கோன் ஒரு நகலை தீயிட்டுக் கொளுத்தினார். இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் அனைவரும் நாடாளுமன்றத்தை விட்டு வெளிநடப்புச் செய்து வெளியே பத்திரிகையாளர்கள் முன்னிலையில் அந்த நகல்களை எரித்து கோஷமிட்டனர். அப்போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க முன்னிலையில் இந்த காட்சிகள் அரங்கேறின. அத்தோடு வெள்ளை அறிக்கை சாம்பல், கறுப்பு அறிக்கையாக மாறியது. அதன் கதையும் முடிந்தது.

இப்போது அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தலைமையிலான குழுவினரும் பீடாதிபதிகளைச் சந்தித்து அவர்களுக்கு அளித்திருக்கும் விளக்கம் மேற்படி 1968ஆம் ஆண்டு ஐதேகவின் வெள்ளை அறிக்கையை நினைவூட்டுகிறது. அப்படி என்றால் இப்போது வெள்ளை அறிக்கையாக உருமாறும் இந்த உத்தேச அரசியல் நகல் யாப்பு மேலும் சாம்பல், கறுப்பு அறிக்கை ஆவதற்குரிய அடுத்த கட்டத்திற்காக காத்திருக்கிறதே உண்மை.

மஹாநாயக்கர்களின் அனுமதி பெற்றே புதிய அரசியல் அமைப்பை தயாரிப்போம் என்று ஐதேகவின் செயலாளரும் அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். இதனை மல்வத்த பீடாதிபதியின் மேற்படி பதிலோடு இணைத்துப் பார்த்தால் வெள்ளை அறிக்கைக்கான சமாதி கண்ணில் தெரியும்.

யாப்பு மாயை?

ஏனெனில் அமெரிக்கப் பிரஜாவுரிமை எனப்படுவது கோத்தபாயவிற்கு ஒருவித்தில் பாதுகாப்புக் கவசத்தைப் போன்றது. போர்க்குற்ற விசார்ணைகள் என்று வரும்போது ஏன் அமெரிக்கா இதுவரையிலும் கோத்தபாயவை விசாரிக்கவில்லை? என்ற கேள்வி இங்கு முக்கியமாகும். இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ஐ.நாத் தீர்மானங்களை முன்னோக்கித் தள்ளியது அமெரிக்காதான். அப்பொழுதே இக்கேள்வி கேட்கப்பட்டது: அமெரிக்கா இலங்கைத்தீவில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் மெய்யாகவே விசாரிக்க விரும்புகிறதா? என்ற கேள்வியும் அப்பொழுது எழுப்பப்பட்டது. ஏனெனில் தனது பிரஜையான ஒருவரே அக்குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியிருக்கும் பொழுது அமெரிக்கா முதலில் தனது பிரஜையைத்தான் விசாரித்திருக்கவேண்டும். ஆனால் அப்படி எந்த அறிகுறியும் இன்று வரையிலும் தென்படவில்லை. அப்படியென்றால் போர்க்குற்ற விசாரணைகள் என்ற ஒரு விவகாரத்தை அமெரிக்கா அழுத்தப் பிரயோக உத்தியாகத்தான் பயன்படுத்தி வருகிறதா? என்ற கேள்வியும் உண்டு. இக்கேள்வியின் பின்னணிக்குள் வைத்தே சவேந்திர டி சில்வாவின் நியமனத்தைக் குறித்த ஒஸ்ரேலியத் தூதுவரின் கருத்துக்களையும் பிரிகேடியர் பிரியந்தவுக்கு எதிராக பிரித்தானிய நீதிமன்றம் விடுத்திருக்கும் பிடியாணையையும் தமிழர்கள் பார்க்க வேண்டும்.

எனவே கோத்தபாய உத்தியோகபூர்வமாக தன்னுடைய அமெரிக்கப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்யும் வரையிலும் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் மேற்குநாடுகளின் நகர்வுகளை தமிழ் மக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நம்பத் தேவையில்லை. அதே சமயம் கோத்தபாய போன்ற நட்சத்திர அந்தஸ்துடைய யுத்த வெற்றி நாயகர் ஒருவர் அடுத்த அரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிடாவிடத்து மகிந்த அணி எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்குமா? என்ற கேள்வியும் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. எனினும் இக் கேள்விகளின் பின்னணியில் சம்பந்தரும், சுமந்திரனும் நம்புவது போல ஒரு புதிய யாப்பு உருவாக்கப்படும் என்று தமிழர்கள் காத்திருக்கவும் தேவையில்லை.

பல மாதங்களுக்கு முன்பு ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசநாயக்கா தனது தமிழ் நண்பர் ஒருவருக்கு பின்வரும் தொனிப்பட கூறியிருக்கிறார். "நாடாளுமன்றத்தில் உள்ள அத்தனை உறுப்பினர்கள் மத்தியிலும் ஒரு புதிய யாப்பு வருமென்று நம்பிக்கொண்டிருக்கும் ஒரேயொரு ஆள் உங்களுடைய சுமந்திரன்தான்" என்று. இதை மேற்கோள்காட்டி நான் ஏற்கெனவே ஒரு கட்டுரை எழுதியுமுள்ளேன். ஆனால் அனுர குமர அவ்வாறு கூறியபின் கிளிநொச்சியில் நடந்த கூட்டத்தில் பேசிய சுமந்திரன் ஒரு புதிய யாப்பைக் குறித்து நம்பிக்கையோடு இருக்க வேண்டுமென்று கூறினார். எதிலும் அவநம்பிக்கையோடு இருக்கக்கூடாது நல்லது நடக்குமென்ற நம்பிக்கையோடு எதிர்பார்க்க வேண்டும் என்ற தொனிப்பட அவர் அக்கூட்டத்தில் பேசியிருந்தார்.

அப்பொழுது மட்டுமல்ல இப்பொழுதும் அவர் அப்படித்தான் பேசுகிறார். ஒக்ரோபர் குழப்பத்தின் போது ரணிலுக்குச் சார்பாக நீதிமன்றத்தில் வழக்காடி வெற்றிபெற்றபின் அவருடைய குரலிலும் செயற்பாடுகளில் உற்சாகமும், நம்பிக்கையும் அதிகரித்துள்ளன. கூட்டமைப்பின் அடுத்த கட்ட தலைமைக்கு அவரோடு போட்டியிட இப்பொழுது ஒருவரும் இல்லை என்ற நிலை வந்துவிட்டது. இப்பொழுது சம்பந்தரை விடவும் அவரே கூடுதலாகக் கதைக்கிறார். சம்பந்தருக்காகவும் சேர்த்துக் கதைக்கிறார் எனலாம். அவர் நம்புவது சரியா பிழையா என்பதை விரைவில் நாடு கண்டுபிடித்து விடும். அதாவது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எப்படியாவது பெறவேண்டும். இல்லையென்றால் சுமந்திரன் காணும் கனவு கூட்டமைப்பின் எதிர்காலத்தையே தோற்கடித்துவிடும்.

பி.கே.பாலச்சந்திரன்

இலங்கை தமிழ் மக்களின் பிரதான அரசியல் அணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் அணுகுமுறைகளையும் செயற்பாடுகளையும் பொறுத்தவரை அடுத்த கட்டம் குறித்து முடிவெடுப்பதில் சிக்கலான ஒரு நிலைமையை எதிர்நோக்குகிறது. எடுக்கக்கூடிய எந்தத் தீர்மானமுமே பிரச்சினையைத் தந்துவிடுமோ என்று அதன் தலைவர்கள் சிந்திக்கவேண்டியிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

ஒரு புறத்திலே, கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ராஜபக்ஈஷ தலைமையிலான எதிரணி அரசியலமைப்பை மாற்றும் முயற்சிக்கு எதிராக மெய்யாகவே போரைப் பிரகடனம் செய்திருக்கிறது. சிறிசேனவின் சுதந்திரக் கட்சியும் அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளைப் பொறுத்தவரை உற்சாகமாக இல்லை. பிரதமர் விக்கிரமசிங்க தன்மட்டில் புதிய அரசியலமைப்பொன்றுக்கு ஆதரவானவராக இருக்கின்றபோதிலும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் மௌனம் வரவிருக்கும் இடரின் முன்னறிகுறியாகவே தெரிகிறது.

உண்மையில், அரசியலமைப்புச் சபை வழிநடத்தல் குழுவின் நிபுணர்குழுவின் அறிக்கையை விக்கிரமசிங்கவைக் கொண்டு சமர்ப்பிப்பதற்கு கூட்டமைப்பு கடுமையாக கஷ்டப்படவேண்டியிருந்தது. அதற்கு அவரை இணங்கவைப்பதற்கு கூட்டமைப்பின் தலைவர்கள் கடந்த வருட இறுதியில் மூண்ட அரசியலமைப்பு நெருக்கடியைப் பயன்படுத்தவேண்டியிருந்தது.



அடுத்த கட்டம் குறித்து தீர்மானிப்பதில் திரிசங்கு நிலையில் தமிழ்க் கூட்டமைப்பு

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டியிருப்பதுடன் அதற்கு முட்டுக்கொடுக்கவேண்டிய தேவையும் இருக்கிறது. தமிழர்களுக்கு விரோதமானவராக நோக்கப்படுகின்ற முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக் ஷவுக்கு நேர்முரணாக விக்கிரமசிங்கவை தங்களது நலன்களிலும் அக்கறைகளிலும் அனுதாபம் கொண்டவராக தமிழர்கள் நோக்குகிறார்கள். ராஜபக்ஷவை ஆட்சியதிகாரத்திலிருந்து விலக்கிவைத்திருப்பதற்கு கூட்டமைப்பு அதனால் இயன்ற சகலதையும் செய்யவேண்டியிருக்கிறது.

ஆனால், தமிழர்களுக்கு அனுகூலமானதாக அமையக்கூடிய புதிய அரசியலமைப்பு ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு ராஜபக்ஷவின் கூட்டு எதிரணியினதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் தயவு கூட்டமைப்புக்கு தேவையாக இருக்கிறது. ராஜபக்ஷவை கூட்டமைப்பு எதிர்க்கவேண்டியும் இருக்கின்ற அதேவேளை, புதிய அரசியலமைப்புக்கு அவரின் ஆதரவைப் பெறவேண்டியும் இருக்கிறது. இது கூட்டமைப்பின் தலைவர்களைப் பொறுத்தவரை பெரிய சவாலாகும்.

கடுமையான அரசியல் தேவை

புதிய அரசியலமைப்பு வரைவு செயன்முறைகள் நெருக்கடியான அல்லது தீர்க்கமான ஒரு கட்டத்தை அடைந்திருக்கும் அதேவேளை, அது தொடர்பிலான அரசியல் அபிப்பிராயம் கடுமையான வேறுபாடுகள் நிறைந்ததாக இருக்கின்ற இன்றைய கட்டத்தில் கூட்டமைப்பு என்ன செய்கிறதோ அதிலேயே அதன் அரசியல் எதிர்காலம் (உண்மையில் அதன் இருப்பு) தங்கியிருக்கிறது.

அரசியலமைப்பு நெருக்கடி வழங்கிய வாய்ப்பு

2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதி சிறிசேன அரசியலமைப்புக்கு விரோதமான முறையில் பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கியதனால் ஏற்பட்ட ஒக்டோபர், –டிசம்பர் அரசியலமைப்பு நெருக்கடியின்போது பேரம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது.

திடுதிப்பென இரகசியமான நடவடிக்கையாக சிறிசேன பிரதமர் பதவியிலிருந்து விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு அவரின் இடத்துக்கு ராஜபக்ஈஷவை நியமித்தபோது ஜனநாயக உலகம் சீற்றமடைந்தது.

50 நாள் நெருக்கடி இலங்கையைப் பெரும் குழப்பநிலைக்குள்ளாக்கியிருந்தது.ஆனால், அது அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறைகளை மீளத்தொடங்கச் செய்வதற்கு மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தல் வாய்ப்புகள் நலிவுறுகின்ற போக்கைக் கட்டுப்படுத்துவதற்கும் கூட கூட்டமைப்புக்கு ஒரு பெரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

16 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த (பிறகு அந்த எண்ணிக்கை 14ஆகக் குறைந்துவிட்டது) கூட்டமைப்பு விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் இருப்பை உறுதிசெய்வதில் முக்கியமான பாத்திரமொன்றை வகித்தது. ஆனால், கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் உறுதியான ஆதரவும் முக்கியமான பங்களிப்பும் இல்லாமல் இருந்திருந்தால் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஈஷ ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் கணிசமான எண்ணிக்கையானவர்களைத் தனது பக்கத்துக்கு இழுத்தெடுத்து தனது நிலையை வலுப்படுத்துவதில் வெற்றிபெற்றிருப்பார்.

கட்சி மாறுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் 50 கோடி ஷரூபா வரை பணம் கேட்டதாக வேறு யாருமல்ல ஜனாதிபதி சிறிசேனவே கூறியிருந்தார். ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களில் சுமார் 45பேர் ராஜபக்ஈஷ பக்கத்துக்குத் தாவுவது குறித்து யோசித்ததாக கூறப்பட்டது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் கட்சிகளும் விக்கிரமசிங்கவுடனேயே தொடர்ந்தும் இருக்க உறுதிபூண்டதை அறிந்த அவர்கள் பீதியடைந்து கட்சிமாறும் எண்ணத்தைக் கைவிட்டதாகவும் தெரியவந்தது. அவர்கள் ஐக்கிய தேசிய முன்னணியிலேயே தொடர்ந்தும் இருந்ததன் மூலமாக பிரதமர் பதவியில் தொடருவதற்கு தேவையான பாராளுமன்றப் பெரும்பான்மை ஆதரவை பெறமுடியாத நிலையை ராஜபக்ஈஷவுக்கு ஏற்படுத்தினார்கள்.

பேரம்

ஆனால், கூட்டமைப்பு விக்கிரமசிங்கவை கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கவில்லை. தமிழ்ப் பேசும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனது அரசியல் வாய்ப்புக்களை வலுப்படுத்திக்கொள்வதற்கு உதவக்கூடிய ஒரு அரசியல் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கூட்டமைப்பு கடுமையான பேரம்பேசலில் ஈடுபட்டது.

2013 மாகாணசபைத் தேர்தல் மற்றும் 2015 பாராளுமன்றத் தேர்தலுக்கு கூட்டமைப்பின் மக்கள் ஆதரவு குறிப்பிடத்தக்களவுக்கு வீழ்ச்சி கண்டிருந்தது. 2018 பெப்ரவரி உள்ளூராட்சித் தேர்தல்களிலும் கூட்டமைப்பின் செயற்பாடு ஏமாற்றத்தையே தந்தது என்றுதான் கூறவேண்டும்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத்தருவதாகவும் போர்க்கால உரிமை மீறல்களை செய்தவர்களை பொறுப்புக்கூற வைப்பதாகவும் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற கூட்டமைப்பினால் முடியாமல்போய்விட்டது. கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்தினால் கோடிக்கணக்கான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டபோதிலும் உருப்படியான எந்தவொரு பொர்ருளாதார அபிவிருத்தியையும் உறுதிசெய்ய கூட்டமைப்பின் நிருவாகத்தில் இருந்த வடமாகாண சபை தவறிவிட்டது. பெருமளவு பணம் பயன்படுத்தப்படாமல் மத்திய அரசாங்கத்துக்கே திரும்பிச் சென்றது.

அரசியலமைப்பு நெருக்கடியின்போது விக்கிரமசிங்கவுடனும் அவரின் தளபதிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது கூட்டமைப்பு 2020 ஆகஸ்ட் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படுவதற்கு ஏதுவாக அரசியலமைப்பு சபை வழிநடத்தல் குழுவின் நிபுணர்குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தது.

வடக்கு, கிழக்கு தமிழ்ப் பகுதிகளில் மத்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் தமது பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்படுத்தப்படவேண்டும் என்றும் கூட்டமைப்பு கோரிக்கை முன்வைத்தது.

வடக்கு, கிழக்கில் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்துவதில் கொழும்பினால் கடைப்பிடிக்கப்படுகின்ற "மேலிருந்து கீழ் நோக்கிய" அணுகுமுறை குறித்து மக்கள் முறைப்பாடு தெரிவித்துவந்த காரணத்தால் இது உச்சபட்ச முக்கியத்துவம் கொடுத்துப் பரிசீலிக்கப்பட்டது.



ரணில், சுமந்திரனின் இரகசிய திட்டங்களுக்கு இடமளியோம்

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் இணைந்து இரகசியமாக மேற்கொள்ளும் தீர் மானங்களை செயற்படுத்த இடமளிக்கமாட்டோம் என எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்தார்.

வெயங்கொட பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையின் புதிய கட்டட திறப்பு விழா இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டார். அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

புதிய அரசியலமைப்பு தொடர்பான வரைபையேனும் இன்னும் தயாரிக்கவில்லை என்று பிரதமர் தெரிவிக்கின்றார். அதேபோன்று அரசியலமைப்பை காணாமலே நாட்டை பிரிக்க முற்படுவதாக தெரிவிப்பதாக கூறுகிறார். ஆனால் அரசியலமைப்பு தொடர்பான உள்ளடக்கங்களை அவர்கள்தான் தெரிவிக்கின்றார்கள். சிலர் அது அரசியலமைப்பு இல்லை என்றனர். சிலர் அரசியலமைப்பு சட்டமூலம் என்கிறார்கள்.

ஆனால் தற்போது புதிய அரசியலமைப்பு தயாரிப்பதற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையானது, சட்டமூலமா இல்லையா என்பதை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் சுமந்திரனுமே அறிவார்கள். அவர்கள் இரண்டுபேரும் இரகசியமாக மேற்கொள்ளப்படும் அனைத்து விடயங்களையும் அரசியலமைப்பில் சேர்க்க முற்படுகின்றனர். அவர்களின் தீர்மானங்களை செயற்படுத்த நாங்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

மேலும் அரசாங்கம் கல்விக்கு பாரியளவில் நிதி ஒதுக்குவதாக பிரசாரம் செய்துவருகின்றது. ஆனால் கடந்த 3வருடங்களில் கல்வியியல் கல்லூரிக்கு மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை. இது எதிர்காலத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறையை ஏற்படுத்தும். இதன் மூலம் கல்விக்கான ஒதுக்கீடுகளை குறைப்பதே இவர்களின் திட்டமாகும்

கேள்வி, பிரதமரின் வாழ்க்கை வரலாறு சீன மொழியில் எழுதப்பட்டிருப்பது தொடர்பில் என்ன நினைக்கின்றீர்கள்?

பதில், ஆம் பிரதமரின் வாழ்க்கை சரித்திரத்தை சீன மொழியில்தான் எழுதவேண்டும். நாட்டின் துறைமுகங்களை சீனாவுக்கு விற்றதையும் சீன மொழியில் எழுதுவார்களோ தெரியாது. நாட்டு வளங்களை விற்பனைசெய்த விதம் குறித்தும் எழுதினால் நன்றாகும்.

அத்துடன் விவசாய பயிர்களை அழித்துவரும் சேனா கம்பளி புழு தொடர்பில் அரசாங்கம் மௌனம் காத்து வருகின்றது. அரசாங்கத்தின் திட்டமா என்ற சந்தேகம் எங்களுக்கு எழுகின்றது. வெளிநாடுகளில் இருந்து உணவுவகைகளை இறக்குமதிசெய்ய விவசாய செய்கைகளை அழிப்பதற்கான சதித்திட்டமா என்ற சந்தேகம் இருக்கின்றது என்றார்.

Rafih AUTO GROUP

MIDTOWN Honda
3400 Dufferin Street
Toronto, ON M6A 2V1
Across from Yorkdale Mall

LEASE TO OWN


$98.47 weekly - Incl. Tax & Int.
$0 down @ 4.99%
LX 2WD AUTO
LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

LEASE TO OWN
$76.70 weekly - Incl. Tax & Int.


2019
$0 down @ 3.99%
LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

CIVIC
2012 & up
$11,990. and up
25 in stock
+ tax

ACCORD
2015 & up
$16,398 and up
10 in stock

CR-V
2010 & up
$9,789 and up
10 in stock
+ tax

ODYSSEY
2015 & up
$23,688. and up
10 in stock

PILOT
2014 & up
$29,988. and up
5 in stock
+ tax

ACURA MDX TL ILX
2011 & up
$11,999. and up
5 in stock

AUDI A 4 Q 7 Q 5
2016 & up
$26,595 and up
8 in stock
+ tax

BMW 535i 335i X 1
2012 & up
$21,688. and up
5 in stock

TOYOTA Venza Highlander Sienna
2013 & up
$21,777 and up
8 in stock
+ tax

DODGE CARAVAN DURANGO JOURNEY
2012 & up
$11,495. and up
10 in stock

INFINITI QX 60
2017 & 2018
$37,475 and up
2 in stock
+ tax

CADILLAC ATS XTS
2016 & 2017
$25,575 and up

FOR TONY SIVA'S CLIENTS!!!
FREE! FREE!! TV

with every purchase of New or Used Vehicle

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

HONDA certified used vehicles come with 7 Years or 160,000 km Warranty



புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

tonymidtown@hotmail.com

Anthony Siva
Sales & Leasing Executive
647-637-0763

Visit my website
www.midtownhonda.com

Tony Siva
Sales & Leasing Executive
647.269.0749


MORTGAGES
எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள்
அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் நத்தார் புதுவருட
வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்!
Merry Christmas &
A Happy New Year
NESAN
416-908-5656
SUBRA
MORTGAGE FINANCIAL
WE DEAL WITH ALL BANKS
TD Canada Trust
Scotiabank
RMG mortgages
FIRST NATIONAL FINANCIAL LP
EQUITABLE BANK
radius financial
MCAP
HOME TRUST
STREET CAPITAL
Mortgage Alliance - Brokerage # 10530
SUBRA
ACCOUNTING TAX
Bus: +1416-660-5656
Toll: 1-844-878-2721
INCOME TAX SERVICES:
Personal Tax Returns (T1)
Corporate Tax Return (T2)
ACCOUNTING SERVICES:
Bookkeeping, Business Registration
Payroll & Many More...
Our Off: 1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
www.subra.com
tax@subra.com

நீராவியடி ஆலயத்தில் அமைக்கப்படும் பௌத்த விகாரை சட்டவிரோதமானது

அம்பலப்படுத்தியது தகவல் அறியும் உரிமைச் சட்டம்



முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்தை அபகரித்து, அமைக்கப்பட்டு வரும் பௌத்த விகாரை சட்டவிரோதமானது என்பது அம்பலமாகியுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களில், எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் சட்டவிரோதமான முறையில் விகாரை அமைக்கப்படுவது அம்பலமாகியுள்ளது.

அங்கு பௌத்த விகாரை இருந்தது, முறைப்படியான அனுமதியின் கீழேயே விகாரை அமைப்பதாக தெரிவித்து, பௌத்த பிக்குகள் கட்டுமானப்பணி செய்து செய்து வந்தது சட்டவிரோதமானது என்பது அம்பலமாகியுள்ளது. எனினும், இந்த தகவல்களை தெரிந்திருந்த அரச அதிகாரிகள் இதுவரை மௌனமாக இருந்ததும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்திருந்த பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை, செம்மலை கிராம மக்கள் ஆண்டாண்டு காலமாக வழிபட்டு வந்தனர். யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர், பிள்ளையார் ஆலயத்தில், புதிய ஒரு பௌத்த ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு பௌத்த ஆலயத்தில் பிரம்மாண்ட புத்தர் சிலை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு வழிபாட்டுக்குச் செல்லும் செம்மலைக்கிராம மக்களுக்கு, சட்டவிரோத விகாரையை அமைத்துள்ள பௌத்த பிக்குவால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. அண்மையில், ஆலயத்தில் பொங்கல் விழாவிற்கு சென்ற செம்மலை கிராம மக்களுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது. இதனால் அங்கு பதற்றமும் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த விகாரை அமைக்கப்படுவது தொடர்பாக, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் செம்மலை கிராம அபிவிருத்தி சங்கத்தினால் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம், தகவல் கோரப்பட்டிருந்தது. அந்த தகவல்களை கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் வழங்கியுள்ளது. அந்த தகவல்களின்படி, இங்கே அமைக்கப்பட்டுவரும் விகாரை அனுமதி பெறப்பட்டோ, விதிமுறைகளிற்கு உட்பட்டோ அமைக்கப்படவில்லையென்ற தகவல் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

2018 ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதம் 14 ஆம் திகதி தகவல் அறியும் உரிமைச் சட்டம் (விண்ணப்ப இலக்கம் MU/MPP/DS/EB/Info/24) மூலம் கோரப்பட்ட தகவலுக்கு அமைவாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தினால் இந்த விகாரை அமைக்கப்பட்டிருப்பது தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவில் விகாரை எதுவும் இருக்கவில்லை.

இதை அண்டிய பிரதேசத்தில் பௌத்த மதத்தை வழிபடுகின்ற பௌத்தர்கள் நிரந்தரமாக வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. இவ்வளாகத்தில் விகாரை அமைப்பதற்கான காணி எதுவும் ஒதுக்கப்படவில்லை.

பௌத்த மதகுரு தங்கியிருக்கும் அரச காணியில் அவர் தங்கியிருப்பதற்கான காணி அனுமதிப்பத்திரம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படவில்லை.

தற்போது பௌத்த மத குருவினால் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானங்களுக்கு பிரதேச செயலகத்தால் எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை.

விகாரை அமைப்பதற்கு அரச காணி ஒன்றை கோரி பிரதேச செயலகத்திடம் விண்ணப்பங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

விகாரை அமைந்துள்ள பகுதிக்கு அண்மையில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற கிறவல் அகழ்விற்கு பிரதேச செயலகத்தினால் எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை.

கிராம அலுவலர்கள் ஊடாக இப்பிரதேசத்தில் இருக்கின்ற காணிகளின் உண்மையான காணி உரிமையாளர்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

அனுமதிப்பத்திர பிரதிகள் சேகரிக்கப்படுகின்றன. இதன் பின்னர் வனவள திணைக்களம் வனஜீவராசிகள் திணைக்களம் என்பனவற்றுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ தகவல்களின் அடிப்படையில், பௌத்த விகாரை சட்டவிரோதமாக பிள்ளையார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தற்போது அங்கு பிரம்மாண்ட புத்தர் சிலை அமைப்பதற்காக வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றது. இதை அதிகாரிகள் தடுத்து நிறுத்துவார்களா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

நீராவியடி பிள்ளையார் ஆலயத்துக்கு “கணதேவி தேவாலய” என்று பெயர் பலகையும் பிக்குவால் நாட்டப்பட்டுள்ளது. இந்த பெயற்பலகை நாட்டப்பட்டுள்ளமை தொடர்பில் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டபோதும் பொலிஸார் பிக்குவுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.